02-15

# அகிலா கோவிந்த்

வெண்ணிலா நாவல்

ரூ.15/-



# காதல் நதியினிலே

வெண்ணிலா ஸ்பெஷல்

நாவலில்

வசந்திவேலன்

எழுதும்



என்னுயிர் நீதானே!

இதுவரை எந்த இதழிலும் வெளிவராத

புத்தம் புதிய நாவல்




# காதல் நதியினிலே... 1

## அகிலா கோவிந்த்

இன்னும் மூன்று தினங்கள் தான் இருக்கிறது. அதன்பின் கல்யாணம். யாரோ ஒருத்தி அவன் மனைவியாய் வந்துவிடப் போகிறாள். அதன் பின் அவளுக்கு எல்லாமே அவன்தான் போல் ஆகிவிடும். அவன் பின்னாலே நடந்து அவனையே சுற்றிக் கொண்டு அவன் சிரித்தால் சிரித்து அவன் அழுதால் அழுது அவன் உணர்வுகளையெல்லாம் புரிந்து கொண்டு அதற்கேற்றாற் போல் வாழ வேண்டிய கட்டாயம் அவளுக்கு.

நினைத்துப் பார்த்த யுகேந்திரனுக்கு வினோதமாகவும் இருந்தது. எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து, படித்து முன் பின் தெரியாத ஒரு வீட்டில் வளர்ந்தவள் இப்போது புதுச் சொந்தமாய் இனி அவன்தான் கதி அவனே கதி என்பது போல் வரப் போகிறாள். இதை நினைத்துப் பார்த்தால் வேடிக்கைப் போல் இருக்கிறது.

குனிந்த தலை நிமிராமல் அவன் சொல்வதற்கெல்லாம் பணிந்து போவாளா? இல்லை நிமிர்ந்து சரிக்கு சரியாய் வாதிடுவாளா? அடங்குவாளா..இல்லை நம்மைஅடக்கப் பார்ப்பாளா? அவள் குணம் எப்படி ? என எதுவுமே தெரியாதுதான் அவனுக்கு!

இது பெற்றவர்களாய் பார்த்து நடத்தி வைக்கும் "அரேஞ்சுடு மேரேஜ்.." அல்லவா? அதனால் பெண்ணைப் பற்றிய எந்த குணமும் தெரியாது தான் அவனுக்கு!

சரி... குணத்தை விடுவோம்... ஆளையாவது..பெண் எப்படி நிறமா...இல்லையா...? அழகா...சுமாரா? ஒல்லியா...குண்டா..? என எதையாவது பார்த்து தெரிந்து கொள்ளலாம் என்றால்....யுகேந்திரனுக்கு அதில் கொஞ்சமும்



லயிப்பில்லை.

"குணம் தான் முக்கியம். இந்த அழகு நிறத்தையெல்லாம் பார்த்து மதிப்பிடுவது தேவையற்ற ஒன்று. மேலும் நீங்கள் எல்லாம் பார்த்து விட்டீர்கள் தானே..உங்களுக்கு பிடித்திருக்கிறது தானே?" அப்படியானால் எனக்கும் பிடித்திருக்கிறதுதான்! ஆளை விடுங்கள்! என பெற்றவர்களிடம் ஒரே போடாய் போட்டு விட்டான்.

தாய் லட்சுமியும், தந்தை கனகசபையும் இதற்கு மேல் ஒன்றும் பேச முடியாதவர்களாய் பெருமிதம் கொண்ட போதும் தங்கள் பையன் நம் மீது இவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறானே...என்று சந்தோஷப்படுவதா..? இல்லை கல்யாண வாழ்க்கையில் எவ்வளவு முக்கியமான விஷயம் அதில் கூட நேரமில்லாதது போல் இப்படி அலட்சியம் காட்டுகிறானே என நினைத்து வருத்தப்படுவதா? என குழம்பத்தான் செய்தார்கள் அவர்கள்.

ஏனெனில் யுகேந்திரனின் குணம் அப்படி எல்லாவற்றிலும் அவனுக்கு வேகம் தான் எல்லா விஷயங்களிலும் அவனுக்கு அவசரம்தான்!

பெரிய பெரிய இயந்திரங்களுக்கு பேரிங்குகளை தயாரித்து சப்ளை செய்யும் தொழிற்சாலையை நடத்தி

வருகிறான். வேறு சிந்தனை எதுவுமில்லாமல் சதா பிசினஸ், பிசினஸ் என அலைந்து வெற்றிக் கொண்டவன். ஆயிரங்களில் சம்பாதித்து லட்சமாக உயர்ந்து இன்று கோடிகளைத் தொட்டவன்.

அப்படி தொழிலில் திறமைகாட்டி கடுமையாய் உழைத்து வெற்றி கண்டவனுக்கு சுறுசுறுபாய் எல்லாவற்றையும் செய்து பழக்கம். வேகமாய் விஷயங்களைச் செய்வது போல் வேகமாகவே முடிவும் எடுப்பான்.

அதே போல் இப்போதும் பெற்றவர்கள் பார்த்து பேசி முடித்த சம்பந்தத்திற்கு உடனே தலையாட்டி விட்டான். பெண்ணை நேரில் சென்று பார்க்க ஆர்வம் காட்டாததை விட யுகேந்திரன் பெண் வீட்டார் கொடுத்த பெண்ணின் போட்டோவைக் கூட பார்க்க மறுத்து திருப்பி கொடுத்தது கண்டுதான் பெற்றவர்களுக்கு மேலும் திகைப்பு.

அதற்கும் ஒரு விளக்கம் கொடுத்தான் அவன். அப்படி மணப்பெண்ணின் புகைப்படத்தைப் பார்த்தால்..அதை வைத்து அவள் மனம் குணம் இப்படியெல்லாம் இருக்ககூடும் என ஒரு கற்பனை மனதில் வந்து விடுமாம். அப்படி மனைவியாய் வரப்போகிற பெண்ணைப் பற்றி அவள் வருவதற்கு



முன்பே கற்பனை செய்து கொள்வதும் பின் நிஜத்தில் அந்தப் பெண் அப்படியில்லாவிட்டால் தான் ஏமாற்றமடையக்கூடும் என்றும், அதற்காக அஞ்சியே வரப்போகிறவளை அவளது இயல்புடனே தான் ஏற்றுக் கொள்ளத் தாயாராகிவிட்டதாகவும் சொல்லி அவர்களை மலைக்க வைத்தான் அவன்!

கனகசபையும், லட்சுமியும் யுகேனின் இந்த வாதங்களால் கலக்கமடையவில்லை. அவர்களுக்கு மகனின் பிடிவாதத்தையும் எடுத்த முடிவில் திடமாய் இருப்பான் என்ற உறுதியும் தெரியும்தானே?

நாள் நெருங்கி விட்டதால் உற்றார், உறவினர்கள் கூட்டம் வந்து வீடும் கல்யாணக்களை கட்டிவிட்டது. அன்றும் வழக்கம் போல் கோட்டும் சூட்டுமாய் அலுவலகப் பைல்களுடன் காரில் கிளம்பப் போனவனை தந்தை கனகசபை வழிமறித்து, “பேசாமல் இன்று வீட்டில் இருந்து விட வேண்டியதுதானேப்பா...எதற்கு அலுவலகம்?” எனத் தடுக்க, ஐயோ...அப்பா! எனக்குப் போரடித்துவிடும்! எனக் கிளம்பினான் அவன்.

காரில் ஏறும் போது திரும்பிப் பார்த்தான். பங்களா உள்ளே பெரிய தோட்டம் புல்தரை என எல்லா இடங்களிலும் சொந்த பந்தங்களின் வாண்டுகள்

விளையாட்டு என்ற பெயரில் ஓடியாடி ரகளை செய்து கொண்டிருப்பது தெரிந்தது. அந்தக் காட்சி கூட ரம்யமாய் அவனுக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. இப்படி ஏதாவது விஷேசம் வைத்தால் தானே கூடுகிறார்கள்..இல்லாவிட்டால்..இயந்திரமாகிவிட்ட இந்த உலகில் யார் வருகிறார்கள்? அவரவர் வேலை, அவரவருக்கு. அவரவர் கவலை அவரவருக்கு!

அதே நினைப்புடன் தனது புத்தம் புதிய டஸ்டர் வண்டியில் ஏறிக்கிளம்பினான். பங்களாக் காம்பவுண்டை விட்டு வெளியேறி சாலையின் சிக்னல் பக்கம் வரும் போது அவனது செல் போன் சிணுங்கியது.

எடுத்தால் நண்பன் ஹரி!

"சொல்லு ஹரி, என்ன விஷயம்?"

"என்ன விஷயமா? படவா இன்னிக்குத்தான் உன் கல்யாண ட்ரீட் தர்றேன்னு சொல்லியிருக்க. அதுக்குள்ள மறந்துட்டியா?"

"மறக்கல! கண்டிப்பா இன்னிக்கு உண்டு!"

"எந்த ஹோட்டல்?"

"ஹோட்டலா ஸ்டார்...மெரிடியன்.."சரியா ஈவ்னிங் அஞ்சு மணிக்கு!

"ஓ.கே..மச்சான். நம்மபடையோடு ஷார்ப்பா



அங்க வந்திருவேன். சரியா?"

"ஓ.கே! பை!"

செல்போனை ஆப் செய்து பாக்கெட்டில் போட்ட யுகேந்திரன் அதே புன்னகையுடன் காரைச் செலுத்தினான்.

ஹரி, கோபி, ராகுல், ரவி என நாலு நண்பர்கள் அவனுக்கு கல்லூரிக் காலத்தோழர்கள். வெவ்வேறு இடங்களில் பணி செய்தாலும் மாதம் ஒரு முறையாவது டயம் ஒதுக்கி ஐந்து பேரும் சந்தித்துக் கொள்வது உண்டு. நேரம் தெரியாமல் மணிக்கணக்கில் அரட்டை அடிப்பதும் உண்டு.

இன்று தன் திருமணத்திற்காக அவர்களுக்கு ஒரு ட்ரீட் கொடுப்பதாக யுகேந்திரன் சொல்லியிருந்தான். அதனால் தான் இந்த ஏற்பாடும் கூட!

சரியாக பத்து நிமிட பயணத்தில் தனது பேரிங்கு தொழிற்சாலையை அடைந்த யுகேந்திரன் தனது கேபின் சென்றதும் படபடவென வேலைகளில் ஆழ்ந்து விட்டான்.

மதிய லஞ்சிற்கு பிறகு பேக்டரி ஓர்க்ஷாப்பை பார்வையிடுவது, தயாரித்த பேரிங்குகளின் தரத்தை சரிபார்ப்பது என அவன் நேரம் கழிந்தது. எல்லாம்

முடிந்ததும் ஞாபகமாக ஐந்து மணிக்கு நண்பர்களுக்கு ட்ரீட் தருவதாக சொல்லியிருந்த மெரிடியன் ஹோட்டலுக்கு கிளம்பி விட்டான்.

யுகேந்திரனுக்கு ஆடம்பரம் சுத்தமாய் பிடிக்காது. ட்ரீட், பார்ட்டி என்ற பெயரில் கூத்தடிப்பதும் அவனுக்குப் பிடிக்காத ஒன்று. அவனுக்கும் சரி அவனது நண்பர்களுக்கும் சரி சிகரெட், மது என எந்த கெட்ட பழக்கங்களும் கிடையாது. அதனாலே இப்போது கூட ட்ரீட் என அவன் நண்பர்களுக்காக கொடுப்பது சின்னதாக ஒரு உணவு விருந்து. அவ்வளவே!

பத்து நிமிட பயணத்தில் ஹோட்டலை அடைந்து விட்டான். நண்பர்களும் அங்கு தயாராக இருக்கவே உள்ளே நுழைந்து அவர்களுக்காக ரிசர்வ் செய்யப்பட்டிருந்த இருக்கைகளில் எல்லோரும் உட்கார்ந்தனர். கேலியும், கிண்டலும், பேச்சுமாய் அவர்களது அரட்டை ஆரம்பமானது.

இடையில் வந்த உணவுகளை கொறித்தபடி தொடர்ந்து அவர்களது பேச்சு சுவாரஸ்யமாய் போய்க் கொண்டிருந்தது. அவர்களது நண்பர்கள் செட்டில் முதலில் கல்யாணம் ஆகப் போவது யுகேந்திரனுக்குத்தான். அதனால் பேச்சிலர் லைஃப்பை இழந்து சம்சாரக்கடலில் விழப் போகும் அவனை



பலவாறாய் கிண்டலடிக்க.. நண்பர்களின் கேலியை எல்லாம் ரசித்து சிரிக்கவே செய்தான் அவன்.

அப்போது தான் நண்பர்களில் ஒருவனான கோபி தற்செயலாய் பக்கவாட்டு பக்கம் பார்த்தவன் கண்களை அகலமாய் அகற்றி ஆச்சரியமானான்.

அவனது பார்வையை கவனித்த மற்றவர்களும் அவன் கவனித்த திசையை நோக்கினர். எல்லோருக்கும் வியப்புத்தான்!

அங்கும் இதே போல் தான் ட்ரீட்தான் நடந்து கொண்டிருந்தது போலும். இருபது வயது தோற்றத்தில் மிடுக்காய் தெரிந்து அந்தப் பெண் தனது மூன்று தோழியர்களுக்கு விருந்து கொடுத்துக் கொண்டிருப்பது போல் தெரிந்தது. ஒரே கேலி அரட்டை நகையொலி என அங்கு தொடர்ந்து எழுந்து அங்கேயும் கலகலப்பை உண்டு பண்ணியிருந்தது.

எல்லோருடைய பார்வையும்,யுகேனின் பார்வை உள்பட மற்ற யார் மீதும் சொல்லாமல் அந்த மிடுக்கான பெண் மீதே சென்றது. பளீரென வெள்ளை நிறம். அகன்ற பெரிய கண்களும் மொட்டு போல் குவிந்து சிவந்த உதடுகளுமாய் அழகாக ஒரு முகம். இதழ்களில் உதிரும் அந்த வசீகரப் புன்னகை யாரையும் மயக்கத் தான் செய்யும். வடிவான உடல்வாகுடன் புடவையை

நேர்த்தியாய் கட்டி நீண்ட ஜடைகளை அழகாகப் பின்னி கொத்தான மல்லிகை மலர்களை அதில் சூடி...அவள் மங்களகரமாய் இருந்தாள். ரொம்பவும் ரம்மியமாய் தெரிந்தாள்.

கண்கொட்டாமல் அவளது சிரிப்பு பேச்சு, நடவடிக்கைகளைப் பார்த்த நண்பர்கள் யுகேன் பக்கம் திரும்பினர்.

"பார்த்தாயாடா? பெண்ணுன்னா.. இதான் பொண்ணு..! இப்படியொரு பொண்ணுதான்.. மணப்பெண்ணாய் மனைவியாய் வர வேண்டும்!"

ஹரி தனது குறுந்தாடியை தடவியபடி சொல்ல மற்றவர்களும் ஆமோதித்து "நீ சொல்றது சரிதான்டா....சூப்பர் பிகர்ன்னு சொல்லுவார்களே.. அது இதுவாத்தான் இருக்கும். இந்தப் பெண் அழகுல மட்டுமில்ல.. அதோட நடவடிக்கை...பேசற விதம்...டிரஸ்..சென்ஸ்.. என எல்லாவற்றிலும் சூப்பராகத்தான் தெரியுது..!" எனச் சொல்ல யுகேந்திரனும் தன்னை மறந்து தான் அந்தப் பெண்ணை அதிசயமாய்ப் பார்த்தான்.

நண்பர்கள் சொல்வது உண்மைதான். அடக்கமும் அழகும் சேர்ந்தாற் போல் அவள் இருந்தாள். மற்ற தோழிகள் எல்லாம் கைகளைத் தட்டி



அதிரடியாய்ச் சிரித்த போது மென்மையாய் சிரித்தாள் அவள். அந்தப் புன்னகையிலேயே ஒருவித தேவதைத் தன்மை ஒளிர்வதை யுகேனே வினோதமாய் உணர்ந்தான்.

அவன் அப்படிப் பார்ப்பதைக் கவனித்த ராகுல் யுகேனின் தோளை தட்டி, "போதும் மச்சான்! பார்த்தது போதும்! இன்னும் இரண்டு நாளில் கல்யாணத்தை வைத்திருக்கிற நீ இதுக்கு மேல் பார்த்தால் ஆகாது..!" கண்களைத்திருப்பு! என்றான்.

சிரித்தபடியே யுகேனும் பார்வையை அந்தப் பெண்ணிடமிருந்து விலக்கினான். ஆனால் மறுநாளே அந்தப் பெண் தன்னைத் தேடி மிகப் பெரிய அதிர்ச்சியொன்றை கொடுக்கப் போகிறாள் என்பதை அப்போது அவன் உணரவில்லை!

## 2

ஸ்டார் மெரிடியனில் யுகேந்திரனாலும் அவனது நண்பர்களாலும் வியந்து பார்க்கப் பட்ட பெண்ணான சாருலதா தன் தோழிகளுக்கு ட்ரீட் கொடுத்த கையோடு சீக்கிரமேஅங்கிருந்து கிளம்பி விட்டாள்.

தோழிகளிடம் விடைபெற்று பார்க்கிங்கில் உள்ள தன் ஸ்கூட்டியை நோக்கி நடந்தாள். இன்னும் இரண்டு நாட்களில் அவளது சகோதரி கமலினிக்கு கல்யாணம்..! கமலினியை மணக்க...இருப்பது இதுவரை அந்த ஹோட்டலில் அவளுக்கு பக்கத்து இருக்கையில் அமர்ந்திருந்த யுகேந்திரன் என்பது அவள் அறியாதது! அதே போல் வாய் பிளக்காத குறையாய் நண்பர்களும் அவனும் பார்த்து வியந்தது தனது மைத்துனியின் அழகைத்தான் என்பது யுகேந்திரன் அறியாதது!

கல்யாண வேலைகள் நிறைய இருக்கிறது. ஒவ்வொன்றாய் கவனிக்க வேண்டும். தனியாளாய் நின்று எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யும் அப்பாவிற்கு உதவியாய் இருக்க வேண்டும் என்றெல்லாம் நினைத்தபடி வீடு நோக்கி தன் ஸ்கூட்டியை விரைவாய் செலுத்தினாள் சாருலதா.

சுந்தரேசன் புவனேஸ்வரி தம்பதிகளுக்கு இரு பெண்கள். கமலினி மற்றும் சாருலதா. கமலினி எம்.ஏ படித்து விட்டு கம்ப்யூட்டர் டிப்ளமோ கோர்ஸ் ஒன்றை கம்ப்யூட்டர் சென்டரில் படித்து வர சாருலதாவோ ஆடிட்டராக வேண்டும் என்ற அவளது லட்சிய ஆசையோடு சி.ஏ படித்து வந்தாள். சுந்தரேசனுக்கு ரியல் எஸ்டேட் தொழிலானதால் நிலங்கள் வாங்கி விற்பதை



பல வருடங்களாக செய்ததால் நல்ல சம்பாத்தியம் கார், பங்களா என குறைவில்லாத வசதியான வாழ்க்கை.

ஆனால் சுந்தரேசன் கண்டிப்புக்கு பெயர் போனவர். ஒழுக்கத்திலும் சரி, காசு செலவு செய்யும் விஷயத்திலும் சரி ரொம்ப ஸ்ட்ரிக்ட் ஆனவர். கார் இருந்தாலும் காருக்கென டிரைவர் இருந்தாலும் நடக்க வேண்டிய இடத்திற்கு நடந்து தான் போக வேண்டும். பந்தாவாய் பணக்காரத்தனத்துடன் காரில் வலம் வரும் நினைப்பெல்லாம் அவரிடம் கிடையாது.எளிமையாக இருந்தால் தான் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் காசின் அருமை தெரியும் என்பார்.

அதைவிட தனக்கு இரண்டும் பெண் பிள்ளைகள் என்பதால் வளர்ப்பிலும் ஒழுக்கத்திலும் ரொம்பவும் கவனம் செலுத்தினார். மாதத்திற்கு ஒரு முறை சினிமா, தினம் ஒரு மணி நேரம் டிவி, செல்போன் அரட்டை கூடவே கூடாது. நவ....நாகரீக... ஆடைகள் அணியக் கூடாது.... என எழுதப்படாத பல கட்டளைகள்.

அதை மட்டும் யாராவது மீற நினைத்தால்... அவ்வளவுதான் பெண்பிள்ளைகள்...வளர்ந்தவர்கள் என பார்க்க மாட்டார். இடுப்பு பெல்ட்டை எடுத்து விளாசிவிடுவார். பின் தாய் புவனேஸ்வரி ஓடிவந்து மகள்களை காப்பாற்றுவதற்குள் போதும் போதும்

என்றாகிவிடும்.

அவர் குணத்திற்கு நேர் மாறாய் புவனேஸ்வரி அப்பிராணி, பரமசாது எதற்கும் அடங்கிப் போகிறவள். அவளுக்கு பாதி நேரம் கோயில் குளம் என்று சென்று வருவதிலேயே போய்விடும்.

இப்போது கமலினிக்கு தரகர் மூலம் வரன் பார்த்து நல்ல வரனாய் பேரிங்கு பேக்டரியின் ஓனரான யுகேந்திரன் அமைந்து விட்டதில் எல்லோருக்கும் பரமசந்தோஷம். யுகேன் வீட்டைப் போலவே கமலினி வீட்டிலும் கல்யாணம் நெருங்கி விட்டதால் உறவினர் படை சூழ்ந்திருந்து களை கட்டியிருந்தது.

சாருலதா ஸ்கூட்டியில் வீட்டை நெருங்கும் போதே முன்புறம் அத்தை, சித்தியின் வாண்டுகள் விளையாடிக் கொண்டிருப்பது தெரிந்தது. உள்ளே நுழைந்து ஸ்கூட்டியை நிறுத்தியவள் அவர்களுக்காக முன்பே வாங்கி வைத்திருந்த மில்க் பாரை எடுத்து ஒவ்வொன்றாய் கொடுத்து விட்டு வீட்டின் உள்ளே போனாள்.

அப்பா முன் ஹாலில் அரட்டை அடித்துக் கொண்டிருக்க அவரைத் தாண்டி உள்ளே நுழைந்தாள். அம்மா, சித்தி, அத்தைமார்களுடன் பேசியபடி இரவு உணவை தயாரித்துக் கொண்டிருக்க..அம்மாவுக்கு



சிறிது நேரம் தயாரிப்பில் உதவினாள்.

பின் கமலினியைத் தேடிப் போனாள். வழக்கமாய் மாடியில் தன் ரூமில் இருக்கும் கமலினி அங்கு இல்லாமல் பால்கனி மொட்டை மாடியில் தனியே நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

இன்னும் இரண்டு நாளில் கல்யாணம் ஆனால் அக்காவின் முகத்தில் மணப்பெண்ணுக்குரிய அந்த ஆர்வம், சந்தோஷம் எதுவும் இல்லையே?

அவளும் பத்து நாட்களாய் கமலினியை கவனித்து விட்டாள். கல்யாணம் பிக்ஸ் ஆனதில் இருந்து அவள் எதையோ பறி கொடுத்தது போல் தானே நடமாடுகிறாள்? இரண்டொரு முறை அவளைப் பிடித்து விடாப்பிடியாய் கேட்ட போதும் அப்படியெல்லாம் ஒன்றுமில்லை...என்று நழுவத்தானே செய்தாள்.

இன்றும் இந்த பால்கனியில் கமலினி அப்படித்தான்.. எதையோ பறிகொடுத்தது போல் இருட்டிய வானத்தை வெறித்த பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள். என்னாயிற்று இவளுக்கு?

பக்கத்தில் போய் அவள் தோளில் கை வைத்து " அக்கா...!"எனவும் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள்

கமலினி.

சட்டென கலங்கியிருந்த கண்களை அவசரமாய் அழுந்தத் துடைத்தாள் அவள்.

அழுகிறாளா...என்ன?

"அக்கா ...என்ன... என்னாயிற்று?"

திடுக்கிட்டு சாருலதா கேட்க, "இல்லை...! ஒன்றும் இல்லை...! சும்மாதான்... நிற்கிறேன்...."என சமாளித்தபடி முகத்தை இயல்பாக்கி புன்னகைக்கவும் முயன்றாள்.

அதுவே சாருலதாவின் சந்தேகத்தை அதிகப்படுத்தியது.

"ஐயோ...அக்கா! நடிக்காதே! உன் கலங்கிய கண்களை நான் பார்த்து விட்டேன்...!"

"சே...சே..! அப்படியெல்லாம் ஒன்றுமில்லை... சாரு..!"

சொல்லியபடி மறுபடியும் கைகளால் முகத்தை வழித்து துடைத்தாள்.

சாரு அவள் கைகளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அந்தக் கைகளின் விரல்களில் ஒருவித நடுக்கம் ஓடுவது அவளுக்கு புரிந்தது. "அக்கா ...ப்ளீஸ்..இனியும் நடிக்காதே..! இன்னும் இரண்டு



நாளில் கல்யாணம்... நீ என்னடாவென்றால் இப்படி தனியே நின்று கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறாய்...அப்படி என்னதான் உனக்குப் பிரச்சினை? சொல்லுக்கா?"

கெஞ்சாத குறையாய் சாருலதா கேட்க கமலினி தன் நீண்ட கூந்தலை சிலுப்பிக் கொண்டு முதல் முறையாய் தடுமாறினாள்.

"இல்லை...இல்லை...சாரு.. ஒன்றும்.. ஒன்றுமில்லை..."

"போதும் அக்கா! இனியும் சமாளிக்காதே! உனக்கு இந்த கல்யாணம் நடப்பதில் ஏதோ பிரச்சினை என்று புரிந்து விட்டது.... அது என்ன பிரச்சினை என்று சொல்லு! என்னிடம் சொல்ல உனக்கு என்ன தயக்கம்? எதுவானாலும் நான் உனக்கு உதவி செய்கிறேன்.. இனியும் யோசிக்காதே...ப்ளீஸ் அக்கா...."

கெஞ்சி அழாத குறையாய் சாரு கேட்க அதற்கு மேல் கமலினியால் மறைக்க முடியவில்லை. பேச்சை நிறுத்தியபடி குனிந்தவள், பொலபொலவென கண்ணீர் விட்டாள். பின் மெல்ல சமாளித்து நிமிர்ந்து கண்களைத் துடைத்த படி, "சாரு நான் ஒருவரை உயிருக்குயிராய் காதலிக்கிறேன். அதுதான் பிரச்சினை!" என்றாள்.

# 3

திருமணத்திற்கு இன்னும் ஒருநாளே இருந்தது. ஆயினும் யுகேந்திரன் விடாமல் பைலைத்தூக்கிக் கொண்டு ஆபிசுக்குக் கிளம்பினான்.

தடுத்தவர்களிடம், "கல்யாண வேலை எல்லாம் ஜரூராய் நடக்கிறது. மாப்பிள்ளையான எனக்கு என்ன வேலை? எல்லாவற்றையும் நீங்கள் தான் இழுத்துப் போட்டு செய்கிறீர்களே? பின் நான் சும்மா வீட்டில் உட்காருவதற்குப் பதில் கொஞ்சம் ஆபிஸில் தலையைக் காட்டி விட்டு வந்து விடுகிறேன்!'' என்ற சமாதானத்துடன் கிளம்பி விட்டான்.

நேரே அலுவலகம் போய் தன் கேபினில் உட்கார்ந்து வேலைகளை கவனித்தான். நாளை கல்யாணம். பின் ஒரு வாரத்திற்கு அவனால் சரிவர அலுவலகம் வர இயலாது. வேலைகளை கவனிக்க முடியாது. அதனால் மேனேஜரைக் கூப்பிட்டு தான் இல்லாத போதும் தன்னை எதிர்பார்க்காது செய்ய வேண்டிய வேலைகளை பற்றியெல்லாம் விளக்கினான்.

உற்பத்தி பிரிவிலும் சூப்பர்வைசர்களை



கூப்பிட்டு செய்ய வேண்டிய பணிகளையும் ஆர்டர்களை குறிப்பிட்ட நேரத்தில் டெலிவரி செய்ய வேண்டிய முக்கியத்தையும் அறிவுறுத்தினான். டெஸ்பாட்ச் செக்ஷனிலும், அனுப்ப வேண்டிய ஈமெயில்களையும், கடிதங்களையும் பணியாளர்களுக்கு விளக்கினான்.

ஆக...இனி ஒருவாரம் அவன் வராவிட்டாலும் ஆபிஸ் வேலையும், தொழிற்சாலையும் தங்கு தடையின்றி நடக்கும்.

நிம்மதி பெருமூச்சுடன் தனது குஷன் நாற்காலியில் கண்களை மூடியபடி அவன் ஒரு நிமிடம் சாய்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திய போது தான் மேஜையில் இருந்த இண்டர்காம் கிணுகிணுத்தது எடுத்தான்.

அலுவலக ரிசப்ஷனில் இருந்து தகவல், "சார்... உங்களைப் பார்க்க வேண்டும் என ஒரு பெண் வந்திருக்காங்க சார்...!"

"என்னைப் பார்க்கவா...? பெண்ணா? யாரது."

"சாருலதா.. எனச் சொல்கிறார்கள்...சார்...!"

"உள்ளே அனுப்புங்கள்..!"எனச் சொல்லிவிட்டு ரிசீவரை யோசனையோடு வைத்தான்.

சாருலதாவா? யாரது? எதற்காக என்னைப் பார்க்க வேண்டும்?

கேள்வியோடு தனது கேபின் கதவின் முகப்பை அவன் பார்க்க இரண்டொரு நிமிடத்தில், “மே...ஐ கம்..இன்..சார்?” எனக் கேட்ட படி அவள் வந்தாள்.

கதவைத்திறந்து உள்ளே நுழைந்தவளை ஆவலாய் பார்த்த யுகேந்திரனும் அதிர்ச்சிக்குத்தான் போனான்.

காரணம்...

அந்தப் பெண் அவள் அவளேதான்!

நேற்று மெரிடியன் ஹோட்டலில் நண்பர்களுக்கு அவன் ட்ரீட் கொடுத்த போது...பக்கத்தில் தன் தோழிகளுடன் உணவருந்தியவள்..அவனும் நண்பர்களும் ஜொள்விடாத குறையாய் பார்த்து அதிசயித்த அழகி. நண்பர்களின் பாஷையில் சூப்பர் பிகர்...!

அவள் தான் மெல்ல ஒரு வித தயக்கத்துடன் நுழைந்து முன் இருக்கை பக்கம் வந்தாள்.

நேற்றே அவளை நன்கு பார்த்திருந்ததாலோ என்னவோ யுகேந்திரன் அவளைப் பார்த்ததும் தெரிந்தவன் போலவே புன்னகைத்தான்.



ஆனால் நேற்று அவனை சற்றும் கவனித்திராத அவளுக்கு அது வியப்பையே அளித்தது.

ஒருவேளை வருபவர்களை இப்படி சிநேகமாய் சிரித்து வரவேற்பது தான் இவனது சுபாவமா? என்ற நினைப்புடன் தயக்கமாகவே அவன் காட்டிய இருக்கையில் உட்கார்ந்தாள்.

நிமிர்ந்து நன்றாகவே அளவெடுப்பது போல் அவளைப் பார்த்தான்.

யுகேந்திரனும் அவளை ஒரு பார்வை பார்த்தான். நேற்றுப் புடவையில் இருந்தவள் இன்று அழகான சுரிதாரில் வந்திருந்தாள். ரோஸ் நிறத்தில் அவளது வெளிர் நிறத்திற்கு ஏற்றார் போல் இருந்த ஆடை அவளது அழகை கூட்டியது. கூந்தலை பின்னலிடாமல் ப்ளோட்டிங் விட்டிருக்கும் பாங்கு வசீகரமாய் பார்க்கத் தூண்டியது. நேற்றுப் போல் முழுதாக இல்லாமல் லேசாக அவள் உதட்டோரம் துளிர் விட்ட புன்னகைகூட யுகேனுக்கு கிறக்கத்தை எற்படுத்தியது.

அதற்கு மேல் யுகேன் பார்க்க முடியாமல், அவனது கவனத்தை திசை திருப்பியபடி,“என் பெயர் சாருலதா...''என தயக்கமாய் அவள் ஆரம்பித்துவிட்டாள்.

யுகேந்திரன் அவளையே பார்த்தான்.

"சொல்லுங்கள்!"

"நான் நாளை நீங்கள் கல்யாணம் கட்டிக் கொள்ள இருக்கும் மணப்பெண்ணின் தங்கை சாருலா..!"

அவள் நிதானமாக தெளிவாக உச்சரித்துச் சொல்ல பொட்டிலடித்தது போல் திகைத்து விட்டான் யுகேந்திரன்!

என்ன மணப்பெண்ணின் தங்கையா? அப்படியானால் மைத்துனியா?

கொஞ்சம் தலையை சிலுப்பிக் கொண்டு இருக்கையில் நேராக உட்கார்ந்து கொண்டவன் இம்முறை கொஞ்சம் தயக்கமாகவே அவளைப் பார்த்தான்.

நேற்றும் சரி...இன்றும் ...சரி..மைத்துனியைத்தான் இந்தப் பார்வை பார்த்திருக்கிறோமா? சே...! என்ன மடத்தனம்! ஒருவித குற்ற உணர்வு அவனை உள்ளுக்குள் இம்சிக்க அதை வெளிக்காட்டாமலே அவளைப் பார்த்தவன், "நான் இதுவரை உங்களைப் பார்த்தது... ஐ....மீன்...கல்யாணப் பேச்சு நடக்கும் போது கூட பார்த்தது கிடையாது..."என்றான்.

"நானும் இதுவரை உங்களைப் பார்த்ததில்லை!



என அவளும் பதிலுக்கு இழுத்துச் சொன்னவள், ஆனால் இப்போது பார்க்க வேண்டிய அவசியம் வந்து விட்டது...."என முடிக்க யுகேந்திரன் புருவங்களை உயர்த்தினான்.

ஆக..ஏதோ ஒரு முக்கியமான விஷயத்தைப் பேசத்தான் இவள் வந்திருக்கிறாள்? என்னவாக இருக்கும்? யார் இவளை அனுப்பியிருக்கிறார்கள்?ஒரு வேளை இவளது அக்காவான மணப்பெண்ணா? எதாவது சொல்லச் சொல்லி அனுப்பியிருக்கிறாளா?

சிந்தனையோடு அவன் அவளைப் பார்க்க அவளது பார்வையிலோ தயக்கம் கூடியது.

அதைப் புரிந்து கொண்டவன் போல், "ம்ம்... சொல்லுங்கள்!" என்றான்.

ஆனால் அவள் சாருலதா மேலும் தயங்கி உதடுகளுக்குள் வார்த்தைகளை விழுங்கினாள்.

"அது...வந்து...சார்...."

"என் பெயர் யுகேந்திரன் நீங்கள் என்னை யுகேன் என்றே கூப்பிடலாம்...."

மீண்டும் அவள் தயக்கத்தைப் போக்கும் வண்ணம், சொந்தமாகப் போகும் போது மரியாதையெல்லாம் தேவையில்லை என்பதை

அவளுக்கு உணர்த்தும் வண்ணம் சொல்லியபடி அவளையே பார்த்தான் அவன்.

"ம்ம்...சரி... ! யுகேன்...சார்... அது...வந்து..."

மறுபடியும் இழுத்து தயக்கத்தைக் கூட்டினாள்.

"ம்ம்..சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்! எதற்காக இப்படித் தயங்குகிறீர்கள்? கமான்! சொல்லுங்கள்!"

அவன் விரட்டாத குறையாய் கேட்க விஷயத்தைப்பட்டென போட்டுடைத்தாள் அவள்.

"எப்படியாவது இந்த கல்யாணத்தை நீங்கள் நிறுத்தியாக வேண்டும் யுகேன் சார்...செய்வீர்களா?"

மிகப் பெரிய விஷயத்தை மிகவும் சாதாரணமாக அவள் சொல்ல அதிர்ந்து போய் தன் சீட்டை விட்டே எழுந்து விட்டான் யுகேந்திரன்!

## 4

யுகேந்திரனுக்கு பெரும் அதிர்ச்சி!

"கல்யாணத்தை நிறுத்த வேண்டுமா? என்ன உளறுகிறாய்?"



கோபத்தில் அவன் சட்டென தன்னை ஒருமையில் விளிப்பதை உணர்ந்தும் சலனப்படாமலே அவனை பார்த்தாள் சாருலதா.

"உங்கள் கோபம் நியாயமானதுதான்.. மிஸ்டர், யுகேன்... ஆனால் பாருங்கள்..! உண்மைஎன்ற ஒன்று இருக்கிறதே..அது தெரிந்தால் நீங்களே கல்யாணத்திற்கு சம்மதிக்க மாட்டீர்கள்.. உடனே கல்யாணத்தை நிறுத்த சொல்லிவிடுவீர்கள்...."

"அப்படி என்ன உண்மைஅது?"

"மணப்பெண்ணான கமலினி அதாவது எனது அக்கா வேறு ஒருவரை விரும்புகிறாள். காதலிக்கிறாள்..."

அவள் படபடவென சொல்ல அவன் குறுக்கிட்டு, "ஓஹோ! காதல் பிரச்சினையா? நான் எதிர்பார்த்தது தான்!" என்றான்.

அதற்கும் விடாமல் சாரு, "காதல் பிரச்சினையை எதிர் பார்த்திருப்பீர்கள். ஆனால் கல்யாணத்திற்கு முன் மணப்பெண் ஓடிப்போவதை எதிர்பார்த்திருக்கிறீர்களா?" என்றாள்.

"என்ன சொல்கிறாய் நீ?"

"என் அக்கா கமலினி நேற்றிரவே தனது

காதலனைத் தேடி ஓடிப் போக பிளான் போட்டிருந்தாள். நான் தான் அவளை தடுத்திருக்கிறேன்... ஆனால்....''

அவள் நிறுத்த யுகேன் எரிச்சலானான்.

''இன்னும் என்ன இழுக்கிறாய் அதான் ஓடிப்போவதை தடுத்து விட்டாயே... பின் என்ன?''

அவன் எரிச்சலுக்கு சாருலதா சொன்ன பதில் மேலும் அவனை எரிச்சலாக்கியது. "இப்போது தடுத்து விட்டேன். கல்யாணத்திற்குப்பின் ஓடினால் என்ன செய்வீர்கள்?"

யுகேன் வாயடைத்துப் போய் அவளைப் பார்த்தான். சாருலதா தொடர்ந்தாள்.

''விவகாரம் அவ்வளவு முற்றிவிட்டது சார்....எல்லாம் காதல்..! கம்ப்யூட்டர் கோர்ஸ் படிக்கப் போனவள் பாடம் சொல்லிக் கொடுத்த டியூட்டரிடமே காதலில் விழுந்து விட்டாள். இருவருமே உயிருக்குயிராய் காதலிக்கிறார்களாம்....!"

சாரு சொல்லிக் கொண்டே போக கைகளை உயர்த்தி நிறுத்தினான் அவன்.

"தாராளமாக காதலிக்கட்டும் காதலித்து விட்டு போகட்டும்! இதை முன்பே உன் வீட்டுப் பெரியவர்களிடம் சொல்லிவிட வேண்டியது தானே?"

"அதில் தான் பிரச்சினையே இருக்கிறது..." என்றாள் சாருலதா தயக்கம் காட்டியவளாய்...

"என்ன பிரச்சினை?"

"எங்கள் தந்தை கோபக்காரரர் கண்டிப்புக்கு பேர் போனவர் கட்டுப்பாடும், ஒழுக்கமும் அவருக்கு ரொம்பவும் முக்கியம். காதல் கத்தரிக்காய் என்று தெரிந்தால் அவ்வளவுதான் பெல்ட்டை எடுத்து அவளை விளாசிவிடுவார்...."

"அவ்வளவு கண்டிப்பானவரா?"

"ஆமாம் சார்! காதல் சினிமா படங்களையும், டிவியில் காதல் பாட்டுக்களையும் கூட பார்க்க அனுமதிக்கமாட்டார். அவர் எப்படி சார் காதலை ஒத்துக் கொள்வார்? இதெல்லாம் புரிந்து தான் எனது அக்கா அந்த விபரீதமான திட்டத்தை தீட்டியிருக்கிறாள்...."

''அதாவது கல்யாணத்திற்கு முன்னால் காதலுடன் ஓடும் திட்டத்தை...?"

யுகேந்திரன் கேலியாய் கேட்பதை உணர்ந்தவள், அதை அறியாதவள் போலவே, "ஆமாம் சார்! அவள் அப்படி ஓடிப்போகும் திட்டத்தை வைத்திருப்பதை

நான் தான் அவள் வாய் மூலமாகவே வரவழைத்து சரியான சமயத்தில் கண்டுபிடித்து... தடுத்து நிறுத்தியிருக்கிறேன்...சார்."

"நல்ல தங்கை தான்!" என கைகளைத் தட்டிக் கொண்ட யுகேந்திரன், "சரி நீயாவது இந்த காதல் விஷயத்தை உன் அப்பாவிடம் தெரிவித்து விடலாம் அல்லது தெரிவிக்க முயற்சி செய்ய வேண்டியது தானே?"

"அது முடியாது சார்.."

"அதான் ஏன் முடியாது?"

"அதான் முன்பே சொன்னேனே சார்.. என் தந்தை மிகவும் பிடிவாதக்காரர். இந்தக் காதலுக்கோ.. என் அக்காவின் கண்ணீருக்கோ எல்லாம் சிறிதும் மசியமாட்டார். அவர் சொன்னால் சொன்னது தான்! மாற்ற முடியாதுதான். அவருக்கு அடங்கிப் போயே நாங்கள் வளர்ந்து விட்டோம். அவரது பேச்சை மீறுவது எங்களால் முடியாத காரியம் அதனால்...அதனால்...."

"ம்ம்....சொல்லு...."

"நீங்கள் தான் இந்த விஷயத்தில் உதவவேண்டும். எங்களை காப்பற்ற வேண்டும்...."

நாளை விடிந்தால் கல்யாணம் எவ்வளவு பெரிய



விஷயத்தை எவ்வளவு எளிதாக சொல்லி உதவி கேட்கிறாள்!

ஒருவேளை மறுத்து விட்டால் இவள் என்ன செய்வாள்? என்னதான் செய்ய முடியும்?

அதையும் கேள்வியாய் அவன் கேட்டுவிட அவளது பதில் வித்தியாசமாகத்தான் இருந்தது.

"சார் , முதலில் தரகர் மூலம் என் வீட்டிற்கு வந்திருந்த உங்களது புகைப்படத்தைப் பார்த்தேன். உங்களது அமைதியான முகம், நீங்கள் நான் சொல்வதை காது கொடுத்து கேட்பீர்கள் எங்கள் நிலைமையை புரிந்து கொண்டு எங்களுக்கு உதவ முன் வருவீர்கள் என்றெல்லாம் எனக்கு நம்பிக்கையூட்டியது...."

இப்படியெல்லாம் ஐஸ் வைத்தால் மயங்கிவிட வேண்டுமா...என்ன?

யுகேந்திரனுள் இந்த கேள்வி எழாமல் இல்லை. சொல்லப் போனால் அவன் அதிர்ச்சியானது கல்யாணத்தை நிறுத்தும் படி அவள் சொன்ன விஷயத்தைவிட இன்னொன்றை நினைத்து தான்!

அது...இப்போதும்...இவ்வளவு அதிர்ச்சியாய் கோபமாய் அவன் அவளிடம் வாதம் பண்ணிய போதும், அவனது இன்னொரு மனம் ரகசியமாய் விழித்து, அவள்

கெஞ்சலாய் பேசும் அழகையும், அவள் முகம் குற்ற உணர்வில் தவிப்பதும், பின் கோபத்தில் சிவப்பதும் என நொடிக்கொரு தடவை பல்வேறு பாவங்களை காட்டிய வண்ணம் இருந்தது அதை எல்லாம் திருட்டுத்தனமாய் பார்த்து பார்த்து உள்ளுக்குள் ரசித்து மயங்கிக் கொண்டிருந்தான் யுகேன்.

அதனால்தானோ.. அந்த குற்ற உணர்வினால்தானோ... என்னவோ... அதற்கு மேலும் யுகேந்திரனால் அவள் மீது கோபப் பார்வை காட்ட முடியவில்லை.

சட்டென இறங்கி வந்தான் அவன்.

“சரி...நான் என்ன செய்ய வேண்டும் என நீ எதிர்பார்க்கிறாய்?”

“நீங்கள் கல்யாணத்தை நிறுத்த வேண்டும்....” என ஆரம்பித்த அவள் மேலே சொல்வதற்குள், “அதற்கென்ன? இப்போதே நிறுத்தி விடுகிறேன். உன் தந்தையிடமேஉடனே போனில் பேசி விடட்டுமா? ”என அவன் கேட்க அவள் பதறத்தான் செய்தாள்.

‘‘ஐயோ...வேண்டாம்! அது....வெல்லாம் வேண்டாம்...”

“பின் என்ன செய்வதாம்?”



“கல்யாணத்தை நிறுத்துங்கள்! அதுவும் நாளை கல்யாண மண்டபத்தில்..எல்லோர் முன்னிலையிலும் ....அதுதான் நீங்கள் செய்ய வேண்டியது...”

அவள் சாதாரணமாய் விளக்க அதிர்ச்சியின் உச்சத்துக்கே போய் விட்டான்அவன்.

“ஏய்...ஏய்.... என்ன உளறுகிறாய்? சத்தமில்லாமல் இப்போதே சொல்ல வேண்டியவர்களிடம் சொல்லி.. பெரும் ரகளை ஏற்படாமல் கல்யாணத்தை நிறுத்தி விடலாம். ...அதைவிட்டு விட்டு நாளை தடபுடலாய் கல்யாணம் நடக்கும் மண்டபத்தில் போய்...நான்...நான்..’’ என சொல்ல வந்தவன் சட்டெனத் நிறுத்தி, “ஆமாம் உன் பிளான்தான் என்ன? அப்படி மண்டபத்தில் எல்லோர் முன்னிலையிலும் தாலிகட்டும் நேரத்தில் சினிமா பாணியில் நான் எழுந்து கல்யாணத்தை நிறுத்த வேண்டும் என்பதா? ம்ம்?” கோபமும் முறைப்புமாய் அவன் கேட்க மறுபடியும் முகத்தில் கெஞ்சலை வரவழைத்தாள் அவள்.

“அது இல்லை சார்....”

“பின் வேறு எப்படியாம்.....?”

“முகூர்த்த நேரத்திற்கு சற்று முன்பே நீங்கள் கல்யாணத்தை நிறுத்திவிடலாம். அதற்கும் ஒரு பிளான்

செய்திருக்கிறோம்.. ”

யுகேந்திரன் இம்முறை கோபத்தை அடக்க முடியாமல் கைகளைக் கட்டிக் கொண்டு அவளைப் பார்த்து, ம்ம்....

“அக்காவும், தங்கையும் யோசித்து பிளான் பிளானாக போட்டிருக்கிறீர்களா? சரி சொல்லு... நிறுத்துவதற்கு என்ன பிளான்?”

மொட்டை கடிதம்...! என்றாள் அவள்.

“மொட்டை கடிதமா?”

“ஆமாம் சார்..அக்காவைப் பற்றி தப்பு தப்பாக எழுதப்பட்ட மொட்டைக் கடிதம். உங்கள் கையில் இருக்கும் அதை வைத்துதான் நீங்கள் கல்யாணத்தை நிறுத்த வேண்டும்...”

“ம்ம்...புரிகிறது! சரி ..அந்த மொட்டைக் கடிதம் எப்படி என் கைக்கு வரும் யார் எழுதித் தருவார்கள்?”

‘‘இதோ நானே கையோடு கொண்டு வந்திருக்கிறேன் சார்...அக்காவே ஒரு பேப்பரில் நலன் விரும்பி எனப் போட்டு அப்படி ஒரு கடிதத்தை எழுதிக் கொடுத்திருக்கிறாள் பாருங்கள்! ’’என அவள் கையிலிருந்த பேப்பரை நீட்ட யுகேன் அதை வாங்கிப் பார்த்தான்.



நல்ல அக்கா...நல்ல தங்கை... என்னமாய் பிளான் போடுகிறீர்கள்!

உள்ளுக்குள் முணுமுணுத்தபடி நிமிர்ந்து அவளைப் பார்த்தான். “சரி..அதன் பின் கல்யாணத்தை நிறுத்திய பின் என்ன நடக்கும்?”

“அதற்கும் ஒரு ப்ளான் இருக்கிறது சார்... ”எனப் புருவம் உயர்த்தி கண்கள் பளிச்சிட அவள் பேசிய அந்த அழகை அவனால் ரசிக்காமல் இருக்க முடியவில்லை.

மேலே சொல், என்றான் அப்படியெல்லாம் செய்யாததுபோல் சாருலதாவோ மூச்சு வாங்க தொடர்ந்தாள்.

‘‘அப்படி கல்யாணம் நின்ற பின், மண்டபமே கொந்தளிக்கும். அப்பா, அம்மா.. உறவினர்கள்.. திகைத்துப் போவார்கள்...செய்வதறியாமல் குழம்புவார்கள்... மகளின் கல்யாணம் இப்படி நின்று போகப் போகிறதே என என் தந்தை தவிக்கையில் நானும் அக்காவும் அவரை தனியே அழைத்துப் போய் அப்பா இப்போது ஒன்றும் கெட்டுப் போய் விடவில்லை...அக்கா கம்ப்யூட்டர் சென்டரில் படிக்கும் போது அங்கிருந்த டியூட்டர் ஒருவர் அக்காவை மணந்து கொள்ள கேட்டிருக்கிறார். அக்கா அப்போது மறுத்து விட்டாள். அவரும் ரொம்ப

நல்லவர்தானாம்.. அவரும் இந்த மண்டபத்திற்கு இப்போது வந்திருக்கிறார். இப்போது கூட என்னைச் சந்தித்து உங்கள் அக்காவிற்கு சம்மதம் என்றால் நான் தாலி கட்ட தயார் என்கிறார். அக்காவிற்கும் அவரை நன்கு தெரியும் என்பதால் அவள் அப்பாவான நீங்கள் சம்மதித்தால் தனக்கும் சம்மதம் என்கிறாள். என்ன சொல்கிறீர்கள் அப்பா? கல்யாணம் மட்டும் நின்று போனால் அது எவ்வளவு பெரிய அசிங்கம்.. என்ன ஒரு அவமானம்? யோசியுங்கள்..! ”என ஒரு லெக்சர் கொடுத்தால் போதாது? அப்பா வேறு வழியில்லாமல் சம்மதித்து விடுவார்தானே?

என தனது நீண்ட உரையை முடித்து விட்டு சாருலதா அவனைப் பார்த்தாள்.

யுகேந்திரன் கைகளைத் தட்டி தலையசைத்தவன், “பேஷ்! பிளான் எல்லாம் பிரமாதம் தான்..!”என்றான்.

“என்ன சொல்கிறீர்கள் சார்? இப்படி அப்பாவை கார்னர் செய்தால் அவர் ஒத்துக் கொள்வார்தானே?”

“ம்ம்...உங்கள் அப்பா..உங்களைப் பெற்றவர்.. நீங்கள் இப்படி திட்டம் தீட்டி கார்னர் செய்யும் போது ஏமாறாமல் அவரால் எப்படி இருக்க முடியும்? சொன்னவன் அப்படியே நடந்து அவள் பக்கத்தில் வந்து



நின்றான்.”

அவளுக்கு வெகு அருகாமையில் வந்து அவளது அழகைப் பார்த்தான். இப்போது அந்தக் கருவிழிக் கண்களின் காந்தமும் உதட்டோர குறுகுறுப்பு புன்னகையும் ஆளை என்னமாய் கொல்கிறது...? பார்வையாலே வீழ்த்தி ஆளை புதைத்தே விடுவாள் போல? என அவள் அழகை சிலாகித்து நினைத்தவன் தொண்டையைச் செருமிசரி செய்தபடி அவளைப் பார்த்தான்.

“சரி இப்படியெல்லாம் நடந்துவிடும் தான்... ஆனால் என் கல்யாணம் நின்று விடுமே? அதற்கு என்ன வழி? என் எதிர்காலம் என்னாவது?” அவன் திடுமென இப்படி கேட்க அதுபற்றி, அவனது நிலை பற்றி கொஞ்சமும் யோசிக்காமல் இருந்த தங்களது மடத்தனத்தை அப்போதுதான் உணர்ந்தாள் சாருலதா.

இரவு பூராவும் யோசித்து அக்காவும் தங்கையும் திட்டம் தீட்டியவர்கள் இதை மறந்து விட்டார்களே! இதற்கும் யோசித்திருந்தால் அந்த வழியையும் சொல்லி இவன் வாயை அடைத்திருக்கலாமே? இப்போது என்ன செய்ய?

“நான் ஒரு வழி சொல்லட்டுமா?”என்றான் அவன்.

"சொல்லுங்கள் சார்...."

"நீ...என்னை மணந்து கொள்ள வேண்டும்!" என்றான் யுகேந்திரன் அமைதியாக.

## 5

சாருலதாவுக்கு பயங்கர அதிர்ச்சி!

என்ன...என்ன ... சொல்கிறான் ? இவனை மணந்து கொள்ள வேண்டுமா? அதுவும் நானா?

"என்ன உளறுகிறீர்கள்? "என்றாள் கோபமாய் அவனை முறைத்தவாறு.

''நான் உளறவில்லை. தெளிவாகத்தான் பேசுகிறேன். நீ என்னை மணந்து கொள்ள வேண்டும்!"என்றான் யுகேந்திரன் படு நிதானமாக.

"ஹலோ.. மறந்துவிட்டீர்களா? நீங்கள்.. நீங்கள்.. என் அக்காவிற்கு மாப்பிள்ளையாக பார்க்கப் பட்டவர்... நீங்கள் போய் என்னை... என்னை .. எந்த ..எந்த முறையில்..." அவள் நிறுத்த அவனோ,

"அப்படியானால் சரி. உன் அக்காவையே எனக்கு கட்டிக் கொடு. கட்டிக் கொள்கிறேன்..!"என்றான் மறுபடியும் அவன் அதே நிதானத்துடன்.



"ஹலோ...விளையாடுகிறீர்களா? இவ்வளவு நேரம் உங்களிடம் அக்காவின் நிலைமைபற்றித்தானே விவரித்து உதவி கேட்கிறேன். திரும்பவும் ஒன்றும் புரியாதது போல் இப்படிக் கேட்டால் எப்படி? சொன்ன அவளுக்கு படபடப்பாய் மூச்சு வாங்கியது."

அட ....இவளின் இந்த படபடப்புக் கூட குழந்தைத்தனத்துடன் ரசிக்கும்படியாகத்தானே இருக்கிறது? என வியந்தவன் தனது கைகளை அவளை நோக்கி உயர்த்தியபடி பேசலானான்.

"ஏன் அவசரப்படுகிறாய்? பொறுமையாக பேசி நிதானமாக சிந்தனை செய்து பார். நான் சொல்கிற உண்மைகள் உனக்குப் புரியும்."

"அது... என்ன அப்படிப் பொல்லாத உண்மைகள்? அதை நீங்களே சொல்லுங்கள்!"

"ம்ம்... சொல்கிறேன்...." என்றபடி யுகேந்திரன் தொண்டையை செருமிக் கொண்டவன், "முதலில் ஒன்றை தெளிவாக தெரிந்து கொள். நீயும் உன் அக்காவும் போட்டிருக்கம் பிளான்படி ஒரு மொட்டைக் கடிதத்தை வைத்துக்கொண்டு மொத்த கல்யாணத்தையே நிறுத்துவது கடினமான விஷயம். கல்யாணத்திற்கு வந்தோர் போவோரிலிருந்து அத்தனை பேரும் உறவினர்கள் உள்படி என் மேல்

பாய்வார்கள். கல்யாணத்தை நான் பாழாக்கிவிடக் கூடாது... என வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு வருவார்கள். அவர்களை எல்லாம் நான் சமாளித்தாக வேண்டும். அதைவிட முக்கியமாய் நான் சமைாளிக்க வேண்டியது என் பெற்றோர்களை நான் முடிவெடுத்தாலும் அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டுமே...? அதனால் அவர்களிடமும் நான் சரியாக நடித்து நம்பும்படி செய்ய வேண்டும். புரிகிறதா?" என யுகேந்திரன் நிறுத்த மெல்ல தலையை ஆட்டினாள் அவள்.

"புரிகிறது."

"புரிந்தால் மட்டும் போதாது. அதற்கு பின் இருக்கிற மிகப் பெரிய விஷயத்தையும் சிக்கலையும் நீ புரிந்து கொள்ள வேண்டும்."

"என்ன சிக்கல்?"

"அதான் என்னைப் பற்றி... என்னுடை நிலைமைபற்றி! இப்படி ஒரு மொட்டை கடிதத்தை நம்பி கல்யாணத்தை நிறுத்தி விடலாம். உன் அப்பாவும் வேறு வழியில்லாமல் உன் அக்காவிற்கு அந்த டியூட்டரையே மாப்பிள்ளையாக்கியும் விடலாம். ஆனால் என் கதி? நின்று போனது என் கல்யாணமும் தானே? இப்படி மொட்டை கடிதத்தை நம்பி



கல்யாணத்தை நிறுத்திய எனக்கு பெண் கொடுக்க வேண்டுமே? யார் கொடுப்பார்கள்? என்னைப் பற்றி அவதூறு பேசுவார்கள்."

அவன் முடிக்கவில்லை. அதற்குள் அவள் குறுக்கிட்டாள்.

"ஓஹோ! அதற்காக நான் உங்களை கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமா? சரியான மடத்தனம்...!"

அவள் கோபமாய் சொன்னாலும் அவன் கொஞ்சமும் சினம் கொள்ளாமல் அவளைப் பார்த்தான்.

"ம்ம்... நீ சொல்வது போல் ஒரு வகையில் மடத்தனம் தான். ஆனால் இதை விட்டால் வேறு வழியில்லை."

"வழி இல்லையா...?"

"ம்ம்... கொஞ்சம் யோசித்துப் பார் உன் அக்கா ஒருவனை காதலக்கிறாள் அவனையே கட்டிக் கொள்ள விரும்புகிறாள் என்கிற ஒரே காரணத்திற்காகத்தான் கல்யாணத்தையே நிறுத்தச் சொல்கிறாய். சரி நீ சொல்கிறபடி நிறுத்திடலாம். ஆனால் இதனால்எனக்கு என்ன லாபம்? எனக்கு என்ன பிரயோஜனம் இருக்கிறது?"

அவன் கேட்க அதன்உண்மையை உணர்ந்து தடுமாறத்தான் செய்தாள்.

"அது.. அது..."

அளால் அதற்கு மேல் பதில் சொல்ல முடியவில்லை. அவன் தொடர்ந்தான். "நான் ஏன் உன் அக்காவிற்காக என் வாழ்க்கையை தியாகம் செய்ய வேண்டும்? எதற்காக கல்யாணத்தை நிறுத்தி எல்லோர் முன்னிலையிலும் அவமானப்பட வேண்டும்? இப்படி கல்யாணம் நின்று போனது தெரிந்தால் நாளை யாராவது துணிந்து எனக்கு பெண் கொடுக்க முன் வருவார்களா? நீயே சொல்...!"

வரிசையாய் கேள்விகளை அடுக்கிக் கொண்டு அவள் கேட்க பதில் சொல்ல முடியாமல் அவள் விழிக்கத்தான் செய்தாள். பின் ஏதோ தோன்ற நிமிர்ந்தாள்.

அப்படியானால் யாரும் பெண் கொடுக்க மாட்டார்கள்... உங்களுக்கு பெண் கிடைக்காது என்று நினைத்து... என்னைப் பெண் கேட்கிறீர்கள்... அப்படித்தானே?

அவன் ஏதோ பாயிண்ட்டை பிடித்தது போல் ஆவலாய் கேட்க அவன் மறுத்தான்.



"அப்படியில்லை..."

"பின்.. வேறு எப்படி"

"அவள் கேட்க அவன் கண்களைச் சுருக்கி அவளை குறுகுறுப்பாய் பார்த்தான்."

"உண்மையை சொல்லட்டுமா?"

"சொல்லுங்கள்!"

"எனக்கு உன்னை ரொம்ப பிடித்திருக்கிறது."

""என்னது?"

"உன்னை பிடித்திருக்கிறது... என்றேன்.."

"ஓஹோ..! என்னை பார்த்து பேசி அரைமணி நேரம் கூட ஆகவில்லை. அதற்குள் என்னை உங்களுக்கு ரொம்பவும் பிடித்து விட்டதோ?"

"அவள் கைகளை கட்டியபடி கேட்க அவன் கடகடவென சிரித்தான்."

"என்ன சிரிக்கிறீர்கள்?"

"உன்னை நான்நேற்றே பார்த்து விட்டேன். நீ தான் என்னை சரியாக கவனிக்கவில்லை."

"நேற்றா..?"

"ம்ம்...! ஹோட்டல் மெரிடினியனில் நேற்று மாலை நேரம் தோழியருடன் உணவருந்திக்

கொண்டிருந்தாயே...? உன் பக்கத்தில் இருக்கையில் நண்பர்களுடன் இருந்தது நான் தான்."

"என்ன நீங்களும் அங்கு வந்தீர்களா? என்னை பார்த்தீர்களா?"

நம்ப முடியாமல் கண்களை விரித்தாள். அதிசயித்தாள்.

"வந்தேன் பார்த்தேன். அப்போதே என் நண்பர்கள் சொன்னார்கள். இப்படி ஒரு பெண் மணப்பெண்ணாய் மனைவியாய் வந்தாலர் நன்றாக இருக்கும் என்று சொன்னார்கள்."

"ஆக ... அப்படி அவர்கள் சொன்னார்கள் என்பதற்கு கேட்கிறீர்களா?"

"அவர்கள் சொன்னது ஒரு காரணம். அதை விட உன்னை எனக்கு பிடித்திருக்கிறது. மேலும் முக்கியமாக எந்த ஒரு விஷயத்திற்கும் ஆதாயத்தை பார்க்க வேண்டும். ஆதாயம் இல்லாமல் நான் செய்து வெறும் தியாகி பட்டம் எடுக்கவா?" அதற்குப்பதில் நீ உன் அக்காவிற்காக தியாகம் செய்! என்னை மணந்து கொள்ள சம்மதித்துவிடு.

அவன் தொடர்ந்து பேசினான் என்னென்னவோ விளக்கினான்.



சாருலதா தலையை பிடித்துக் கொண்டாள்.

அவளால் ஒரு முடிவிற்கு வர முடியவில்லை.

அதனாலே, "நான் யோசிக்க வேண்டும்... " என்றாள்.

## 6

சாருலதா பேசிமுடித்து கிளம்பிப் போய்விட்டாள்.

யோசிக்க வேண்டுமாம்! உடனே பதில் சொல்ல முடியாதாம்.

"தாராளமாக நீயோசி! ஆனால் உன் முடிவைப் பொறுத்துதான் என் முடிவு...!"

திடமாய் சொன்னான் யுகேந்திரன்.

அவள் நிமிர்ந்து ஒரிரு கணம் இமைக்காமல் அவனைப் பார்த்தாள்.

அது பார்வையா... இல்லை முறைப்பா...? என அவனுக்கே சந்தேகமாயிருந்தது.

கேட்க வந்தது உதவி அதற்கு விலையாய் தன்னையே கேட்கிறானே. என்ன மனிதன் இவன்? என் நினைக்கிறாளா?

அல்லது இவன் ஆள் எப்படி? அக்காவிற்கு பார்த்தவன் தானே... நன்றாய்த்தானே இருக்கிறான் ... கட்டிக் கொள்ளலாமா? என் நினைக்கிறாளா?

என்னவோ இருந்துவிட்டு போகட்டும். எப்படியோ முடிவு எடுத்துக் கொள்ளட்டும்.

ஆனால் அவள் சாருலதா கிளம்புகையில், "உன் முடிவை இன்று மாலைக்குள் எனக்கு தெரிவித்து விடு ...! " என கறாராய் கூறி தன் செல்போன் எண்ணையும் கொடுத்து அவளை அனுப்பியிருந்தான்.

சாருலதா கிளம்பிச் சென்றதும் யுகேந்திரனும் தலையைப்பிடித்துக் கொண்டு யோசிக்க ஆரம்பித்தான்.

கல்யாண் எவ்வளவு பெரிய விஷயம்? அதை நிறுத்தி விளையாடுவது... இப்படியெல்லாம் பிளான் போடுவது சரிபட்டு வருமா? அத்தனை பேர் முன்னிலையில் கல்யாணத்தை நிறுத்துவது என்ன சாதாரண விஷயமா? இந்தப் பெண் சாருலதா சொல்கிறாள் என் நாமும் தலையாட்டிக் கொண்டிருக்கிறோமே? என்றெல்லாம் யோசித்த போது அவனுக்கு பயமும் உண்டாயிற்று.

எல்லாவற்றையும் விட அவன தாய் தந்தையிடம்



உண்மையைச் சொல்லாமல் இப்படி பொய்பேசி அல்லவா நடிக்க வேண்டும்? எல்லாவற்றையும் விட அதைத்தான் கஷ்டமாய் உணர்ந்தான் யுகேந்திரன்.

இது கிட்டத்தட்ட அவர்களை ஏமாற்றுவது போல்தானே?

எதற்காக இதை செய்ய வேண்டும்?

சாருலதாவிற்காகவா? இல்லை அவள் அக்கா தான் காதலித்தவனையே கைப்பிடிப்பதற்காகவா?

இரண்டு விஷயங்களுக்காகவும் தானே!

அது மட்டுமல்ல...! இன்னொருவனை இப்படி தீவிரமாய் காதலிக்கும் பெண்ணை இனி அவனால் எப்படி மணக்க முடியும்?

அதனால் கல்யாணம் நிறுத்தப்பட வேண்டியது தான்.

மேலும் அன்று தெரிந்தோ தெரியாமலோ சாருலதாவை மெரிடியன் ஹோட்டலில் பார்த்தது அவள் அழகில் வியந்தது எல்லாம் தற்செயலான விஷயமே! ஆனால் அவளே இப்படியொரு பிரச்சனையில் உதவி கேட்டு வரும் போது அந்த உதவிக்கு பிரதிபலனாய் அவனையே கேட்பதும் சரிதானே!

நாம் கேட்பதை கேட்போம். அவளுக்கு விருப்பமிருந்தால் சரி சொல்லட்டும். இல்லாவிட்டால் விட்டு விடட்டும்.

அப்படி அவன் நினைக்கும் போதே அவளைது பளீர் முகம் பெரிய துறு துறு கண்களும் குவிந்த அவளது வடிவான இதழ்களம் அவன் நினைவுக்கு வந்தது.

இப்படியொரு பேரழகி தனக்கு மனைவியாய் வந்தால் நன்றாகத்தானிருக்கும்? என்ற நினைப்பு அவனுள் ஓடியது.

அப்படி ஒரு அழகி கிடைப்பதற்காக அவன் என்ன வேண்டுமானாலும் ரிஸ்க் எடுக்கலாம். எப்படிப்பட்ட கல்யாணத்தை வேண்டுமானாலும் நிறுத்தலாம். எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் அவமானப்ப படலாம்.

பின் எதற்காக கவலைப்பட வேண்டும்?

யுகேந்திரன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். சாருலதா சொல்லப் போகும் முடிவுக்காக ஆவலாய் காத்திருக்க ஆரம்பித்தான்.

அங்கு ... சாருலதாவும்... யுகேந்திரன் அலுவலகத்தில் இருந்து தீவிர யோசனையோடு தான் கிளம்பி போனாள்.



வீட்டுக்குள் நுழைந்தவனை ஆவலாய் அவள் வரவை எதிர்பார்த்து தேடிக் கொண்டிருந்த அக்கா கமலினிதான் தனியே இழுத்து மொட்டை மாடிப் பக்கம் கூட்டிப் போனாள்.

''என்னடி ... என்னாயிற்று?'' என பரபரத்தவனிடம சாருலதா விஷயம் முழுவதையும் ஒப்புவித்தாள்.

கேட்ட கமலினியும் அதிர்ச்சிக்குத்தான் போனாள். அவளால் அதை கொஞ்சமும் ஜீரணிக்க முடியவில்லை!

"என்ன அநியாயம்! நீ அவரைக கட்டிக் கொள்ள வேண்டுமா? என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்? இது ஒரு வகையில் பிளாக் மெயில் செய்வது போல் அல்லவா இருக்கிறது?"

அதற்கு தலையாட்டி அப்படியே ஆமோதித்தாள் சாருலதா

"கிட்டதட்ட அப்படித்தாங்கா! ஆனால் அதை வேறுவிதமாய் அவர் நியாயப்படுத்தப் பார்க்கிறார். தனது கல்யாணம் நின்று போய்விட்டால்... இனி பெண் கிடைப்பது கஷ்டம் எனவும் சொல்லி.... என்னைக கட்டிக் கொள்ள சம்மதம் கேட்கிறார்... மேலும்..."

"சொல்லு..."

"என்னை அவருக்கு பிடித்திருக்கிறதாம். அவர் இப்படிக் கேட்பதற்கு அதுவும் ஒரு காரணமாம்...!"

சொல்லிவிட்டு கன்னத்தில் கை வைத்தபடி கமலினியையே பார்த்தாள் சாருலதா.

கமலினி நெற்றியினை இருக்கிக் கொண்டே தீவிரமாய் யோசிக்கஆரம்பித்தாள்.

யோசித்து ஒன்றும் பிடிபடாமல் பின் அவள் பக்கம் திரும்பினாள் கமலினி.

"நீ என்ன நினைக்கிறாய் சாரு?" என்றாள்

"இந்த மாதிரி விஷயங்களுக்கு உடனே முடிவு எடுக்க முடியாது தானே? திடுதிடுப்பென்று ஒருவரை எப்படி மாப்பிள்ளையாக ஏற்றுக் கொள்வது? கைகளை விரித்து சாருலதா சொல்ல பதிலுக்கு ஆமோதித்து தலையாட்டினாள் கமலினி"

"எனக்கும் அப்படித்தான் தோணுகிறது சாரு..."

"பின் என்னதான் செய்ய...? அவர் இன்று மாலைக்குள் முடிவை போன் பண்ணி சொல்ல வேண்டும் என்று கெடு வேறு விதித்திருக்கிறார்..."

கமலினி எதுவும் பேசாமல் மௌனமாகி



விட்டாள்.

தனக்காக தங்கையின் வாழ்க்கையை பலியிடுவதா? என அவள் நினைப்பது சாருலதாவுக்கு புரிந்தது.?

ஆனால் இதை விட்டால் வேறு வழியில்லை தானே!

கறாரான அப்பா... வேறு எந்த சாக்குப் போக்கிற்கும் கல்யாணத்தை நிறுத்த மாட்டார். மாப்பிள்ளையாக பார்த்து கல்யாணத்தை நிறுத்தினால் தான் உண்டு. அதற்கு ஒரே வழி இது தான்... இப்படித்தான்!

ஆனால் அதே நேரத்தில் யுகேந்திரன் சொல்வதற்காக டக்கென்று சம்மதிக்க முடியாது தானே?

என்ன செய்ய?

யோசித்த சாருலதா ஒரு முடிவிற்கு வந்து நிமிர்ந்தாள்

"அக்கா எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது..."

"என்ன சாரு?"

"இப்போது நமக்கு முக்கியம் நடக்க இருக்கும் உன் கல்யாணத்தை நிறுத்துவது... பின் பிளான் செய்து உன் காதலரையே மாப்பிள்ளையாய் ஆக்குவது.

அப்படித்தானே?"

"ஆமாம் சாரு..."

"அப்படியானால் அதை பற்றி மட்டும் பேசு. மற்றவைகளை பின்னர் பார்த்துக் கொள்வோம்..."

"என்ன சொல்கிறாய்...? நீ செல்வது புரியவில்லை சாரு..."

"அதாவது அக்கா முதலில் உன் கல்யாணத்தை நிறுத்தி உன் காதலரை மாப்பிள்ளையாக்குவோம். என்னைப் பற்றி, யுகேந்திரன் பேசும் என் திருமணம் பற்றியெல்லாம் பிறகு யோசிப்போம். பிறகு முடிவெடுப்போம்."

"ஆனால் யுகேந்திரன் முடிவை இப்போதே சொல்ல வேண்டும் என்கிறானே?"

"ஆமாம்! அவருக்கு இப்போதைக்கு சரி என்பது போல் சொல்லி விடுவோம். அப்படிச் சொல்லி அவர் மூலம் நம் திட்டத்தை நடத்தி உன் கல்யாணத்தை நிறுத்தி விடுவோம். எல்லாம் நல்லபடியாக முடிந்ததும் மற்ற விஷயங்களை பற்றி நிதானமாய் பேசி முடிவெடுப்போம்.... என்ன?"

அந்த சூழ்நிலையில் அவள் சொன்ன யோசனைதான் சரி என்று பட்டது. "அப்படியே செய்



சாரு!" என்று சொல்ல சாருதலா தன் சம்மதத்தை சொல்ல தயாரானாள்.

## 7

சாருலதா தாமதிக்காமல் யுகேந்திரனிடம் சம்மதத்தை சொல்லிவிட்டாள்.

கேட்ட யுகேந்திரன் ஆச்சரியத்துடன் குஷியாகிவிட்டான். இவ்வளவு சீக்கிரத்தில் தனது நிபந்தனைக்கு அவள் சம்மதம் தெரிவிப்பாள் என அவன் கொஞ்சமும் நினைக்கவில்லை.

எப்படி சம்மதித்தாள்?

எதற்காக சம்மதித்தாள்?

அக்காவிற்காகவா?

இல்லை... அவனும் ஆள் ஓரளவு பர்ஸனாலிட்டியுடன் ஏற்றுக் கொள்ளும் வகையில் இருந்ததாலா?

அவனால் அதற்கு விடை கண்டு பிடிக்க முடியவில்லை. ஏனெனில் அவள் சாருலதா சம்மதம் சொன்ன குரலில் எவ்வித உணர்ச்சியையும் அவனால்

கண்டு பிடிக்க முடியவில்லை.

எது... எப்படியோ சம்மதம் சொல்லி விட்டாளே... அது போதும்... என முடிவுக்கு வந்தான் யுகேந்திரன்.

சம்மதம் சொல்லிய சாருலதா கூடவே இன்னொரு விஷயத்திலும் அவனது உதவியை கேட்டிருந்தாள்.

அதாவது அக்கா கமலரினியின் காதலரானஅந்த கம்ப்யூட்டர் சென்டர் டியூட்டர் தன் நண்பர்களோடு வந்து யுகேந்திரனை சந்திப்பார் எனவும், அவருக்கு நாளை மண்டபத்தில் அவர் செய்ய வேண்டியவைகளை அவன் சொல்லி கொடுத்து உதவும் படி கேட்டிருந்தாள்.

அவள் சொல்ல பதிலுக்கு யுகேந்திரனோ, ''அதற்கென்ன? என்கு சகலையாகப் போகிறவர்தானே? அவருக்கு கண்டிப்பாக தெரியாத விஷயங்களை சொல்லிக் கொடுக்கிறேன். அவருக்குத் துணையாக எனது நண்பர்களையும் இருக்கச் செய்கிறேன் போதுமா?" என்றான்.

கூடவே அவளது சம்மத முடிவை தெளிவாய் அறிந்து கொள்ள விரும்புவனாய், "நான் சொன்ன நிபந்தனையில் உனக்கு பூரணமான சம்மதம் தானே ?



எவ்வித சிரமமுமில்லையே?" என தான் அவளுக்கு கஷ்டம் கொடுத்து விட்டதை போல் உணர்ந்து விடக்கூடாது என்ற நினைப்பில் கேட்டும் வைத்தான்.

அதற்கு சாருலதா உடன் பதிலளிக்காமல் ஓரிரு நிமிடம் மௌனமாய் இருந்துவிட்டு, "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை சார்... எனக்கு சம்மதம் தான்!" என்று சொன்னது யுகேந்திரனுக்கு பெரும் நிம்மதியை வரவழைத்தது.

இது போதுமே அவனுக்கு...! என்பது போல் மிகுந்த உற்சாகமாகிவிட்டான் யுகேந்திரன்.

உடனே சுறுசுறுப்பாய் சாருலதாவும் கமலினியும் போட்டிருக்கும் பிளானை செயல்படுத்த தீவிரமாய் ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தான்.

முதலில் தன் நண்பர்கள் ஹரி, கோபி, ராகுல் எல்லோரையும் உடனே வரவழைத்துப் பேசினான். திகைத்த அவர்களிடம் திட்டம் முழுவதையும் விளக்கி புரிய வைத்தான்.

"இது ரொம்ப ரிஸ்க் யுகேன். எதற்காக ஒத்துக் கொண்டாய்?" என எல்லோரும் கேள்வியாய் துளைக்க ஒற்றை பதிலாய் சாருலதா தான் என்று அவன் சொன்னான்.

"என்ன சாருலதாவா?"

வெட்கமாய் தலையாட்டியவன் நண்பர்கள் ஆச்சரியமாய் பார்த்தனர்.

"யுகேன்... நீயா... இப்படியெல்லாம் சொல்வது? எங்களுக்கு ஒன்றும் புரியவில்லையடா...!"

என அதிசியித்தவர்களிடம், "எல்லாம் காதல் உங்களுக்கு புரியாது...! " என்று சொல்லி அவர்களது வாயை அடைத்தான்.

பின மறு நாள் கல்யாணத்தை நிறுத்த அவர்களும் ஒத்தாசையாய் செய்ய வேண்டிய விஷயங்களை விளக்கினான்.

அப்படி அவன் விளக்கிக் கொண்டிருந்த நேரத்தில் சாருலதா சொன்ன கமலினியின் காதலரான அந்த டியூட்டரும் அவரது நண்பர்களுடன் அவசை சந்திக்க வந்து விட்டார்கள். அந்த இடமே களைகட்ட ஆரம்பித்தது.

அந்த டியூட்டரின் பெயர் மோகன். அவனும் கமலினியும் கிட்டதட்ட ஒரு வருடமாய் உயிருக்குயிராய் காதலிக்கிறார்களாம். விஷயத்தை சொல்ல அவனுடன் கையை குலுக்கிக் கொண்டான் யுகேந்திரன். பின் எல்லோரும் கூடிப் பேசி



சாருலதாவும் கமலினியும் போட்டிருந்த திட்டத்திற்கு மெருகூட்டினர். மறு நாள் வெற்றிகரமாய் திட்டத்தை செயல்படுத்த தயராயினர்.

மறு நாள் நிதானமா விடிந்தது.

இரவு முழுவதும் யுகேந்திரனுக்கும் தூக்கமில்லை. சாருலதா கமலினிக்கும் தூக்கமில்லை. ஏன் உதவிக்கு வந்த நண்பர் படைக்கு கூட தூக்கமில்லை. என்னாகப் போகிறதோ... எப்படி நடக்கப் போகிறதோ? என எல்லோருக்கும் அடிவயிற்றில் ஒரு பய உணர்வு.

ஆனால் எல்லாம் சரியாகத்தான் நடக்கும் என்ற நினைப்புடன் துணிச்சலாகவே செயல்பட்டான் யுகேந்திரன். மாப்பிள்ளை அழைப்பில் இருந்து எல்லாவற்றிலும் உற்சாகமாகவே கலந்து கொண்டான். உற்றார் உறவினர் புடை சூழ மாலை யும் கழுத்துமாய் மண்டபத்தில் கம்பீரமாய் வந்து இறங்கினான்.

அதற்கு நேர்மாறாய் உள்ளுக்குள் நடுங்கியபடியே வந்து இறங்கினாள் கமலினி. அவள் கையைப்பிடித்துக் கொண்டு ஒட்டிக் கொண்டே வந்து இறங்கிய சாருலதாவும் கலக்கத்தில் தான் இருந்தாள். ஆனாலும் பயப்படும் அக்கா முன் எதையும் காட்டிக் கொள்ளக் கூடாது என்பது போல் முகத்தில் தைரியத்தை காட்டினாள்.

மண்டபத்தில் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாய் வர ஆரம்பித்தது. மேளதாளங்களுடன் சடங்குகள் ஒவ்வொன்றாய் நடக்க ஆரம்பித்தது. யுகேந்திரன் சுதாரிக்க ஆரம்பித்தான்.

மண்டபத்துக்குள் யுகேந்திரன் சாருலதாவைத்தான் தேடினான். ஒரு நண்பனை அனுப்பி அவளை உடனே வருமாறு செய்தான். புரியாமல் ஒரு வித பரபரப்புடனே அவனைத் தேடி வந்தாள் சாருலதா.

பட்டுச் சேலையில் தேவதை போல் மினுங்க வந்தவளை கண் கொட்டாமல் பார்த்தான்.

ஆனாலும் அந்த விஷயம் அவனுக்கு உரைத்தது. இரவு முழுவதும் அவன் யோசித்து முடிவெடுத்த ஒரு விஷயம். அதை சொல்லியாக வேண்டுமே?

ஒப்புக் கொள்வாளா?

அப்படி ஒப்புக் கொள்ளாவிட்டால் அவளை சம்மதிக்கவைக்க பிளாக்மெயில் செய்வது போல் இன்னொரு விஷயத்தையும் வைத்திருக்கிறானே?

எது... எப்படியோ இந்த அழகுச்சிலை நமக்கு சொந்தமாக மனைவியாக வந்து விட வேண்டும். அதற்காக எது வேண்டுமானாலும் செய்யலாம்.



மனதுக்குள் நினைத்தபடி! யுகேந்திரன் அவளைப் பார்த்து, "நாம் போட்ட திட்டம் எல்லாம் அப்படியே நடக்கும். அதில் ஒரு சின்ன மாறுதலை நான் செய்திருக்கிறேன்..." என அவன் ஆரம்பித்தான்.

சாருலதாவின் முகம் திகைப்பிற்கு போனது.

"சின்ன மாறுதலா? என்ன சொல்கிறீர்கள்?"

"ம்ம் .... உன் அக்காவின் கல்யாணத்தை நிறுத்தி அவள் விரும்பும் காதலனுடன் கட்டி வைத்து விட்டு அடுத்து உடனே நம் திருமணம்..."

அவன் சொல்ல அவள் ஒரேடியாய் திடுக்கிட்டுப் போனாள்.

"என்ன ... நம் திருமணமா?"

"ஆமாம்... நீ தான் என்னை திருமணம் செய்ய நம்மதம் சொல்லி விட்டாயே... பிறகென்ன?"

"அதற்காக ... இப்படி உடனே செய்ய வேண்டுமா? பின்னால் இன்னொரு சமயத்தில் ... .இன்னொரு நாளில்"

அவள் இழுக்க, "அது கண்டிப்பாக முடியாது...!" என்றான் யுகேந்திரன்.

"ஏன் முடியாது?"

"உன் அப்பா ஒரு போதும் அதற்கு ஒத்துக்

கொள்ள மாட்டார். நான் உன் அக்காவின் கல்யாணத்தை நிறுத்துவதால் உன் குடும்பத்தினர்கள் அனைவரும் என் மீது கொலைவெறியோடு இருப்பார் கள். அவர் எப்படி மீண்டும் எனக்கு பெண் கொடுக்க முன் வருவார்கள்?" கொஞ்சம் யோசித்துப் பார்.

அவன் சொல்ல அந்தக் கோணத்தில் அவள் யோசிக்காதது அவளுக்கு சுரீரென உரைத்தது. ஆனால் அவள் தான் எல்லாவற்றையும் பின்னால் பார்த்துக் கொள்வோம் என அது பற்றி யோசிக்காமல் இருந்து விட்டாள்.

மௌனமாய் அவள் அவனையே பார்க்க அவளிடம் தான் போட்டிருக்கும் புது திட்டத்தை விவரித்தான் யுகேந்திரன்.

"அதன்படி யுகேந்திரன் முதலில் மொட்டைக் கடிதத்தை காட்டி கமலினியின் கல்யாணத்தை நிறுதம்திவிடுவான். பின் சாருலதா அவள் தந்தையிடம் சொல்லி கமலினியின் காதலனான மோகனையே மாப்பிள்ளையாய் ஆக்குவது. அதன் பின் கமலினி மோகன் திருமணம் நடந்ததும் யுகேந்திரன்உள்ளே புகுவானாம்"

நேராக சாருலதாவின் தந்தையிடம் போய் கல்யாணத்தை நிறுத்தி உண்மைக் காரணத்தைச்



சொல்வானாம். அதாவது கமலினியின் காதலன் மோகன் வந்து தன்னிடம் தானும் கமலினியும் உயிருக்குயிராய் காதலிப்பதை சொல்லி கெஞ்சியதாலே தான் இப்படி ஒரு திட்டம் போட்டு கல்யாணத்தை நிறுத்தியதாகவும் அதற்காக தன்னை மன்னிக்கும்படியும் கேட்பானாம்.

பின் அவரை சமாதானம் செய்து விட்டு... கமலினியால் நின்று போன அவனது கல்யாணம்... உடனே நடந்தால் தான் நல்லது... இல்லாவிட்டால் என் வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும் எனச் சொல்லி, எனக்கு உங்கள் அடுத்த பெண் சாருலதாவை கட்டிக் கொடுங்கள் என பெண் கேட்பானாம். அப்படி அவன் சொல்லி சாருலதாவின் அப்பா என்ன முடிவெடுக்க என நினைக்கும் சமயத்தில் சாருலதா உள்ளே புகுந்து, அக்காவின் காதலுக்காக இவ்வளவு தூரம் உதவிய அவனை தனக்கு கட்டிக் கொள்ளச் சம்மதம் என்று சொல்லிவிட வேண்டுமாம். பின் எல்லாம் சுபமாய் முடிந்து விடுமாம்.

யுகேந்திரன் தன் புதிய திட்டத்தை விவரிக்க ... கேட்ட சாருலதா பெரும் அதிர்ச்சியடைந்தாள்.

"என்ன ... என்ன ... சொல்கிறீர்கள்...? இது ... இது ... எப்படி சாத்தியமாகும்? மேலும் உங்கள்

திருமணத்திறகு என்ன அவசரம்?"

அவள் கேட்க கடகடவென சிரித்தான் யுகேந்திரன்.

"என்ன சாரு மறந்துவிட்டாயா? நடக்க இருப்பதே என் திருமணம் தானே? அதை நிறுத்தவிட்டு தானே இப்படியெல்லாம் திட்டம் தீட்டினோம்."

"அதற்காக உடனே உங்களை திருமணம் செய்து கொள்ள வேண்டுமா?"

"வேறு வழியில்லை சாரு..."

"என்னால் முடியாது... நான் ஒரு போதும் சம்மதிக்க மாட்டேன்.."

யுகேந்திரன் முகம் மாறினான்.

"நீ சம்மதிப்பாய். உன்னை சம்மதிக்க வைக்க எனக்கு வழி தெரியும்..."

"என்ன வழியா?"

அவள் திகைக்க ... நிதானமாய் பெரிய செல் போனை எடுத்து அதன் பட்டன்களை உயிர்ப்பித்து திரையைக் காட்டினான்.

அதில்

சாருலதா அவனை அவனது அலுவலகத்தில் சந்தித்து கமலினியின் காதல் பற்றி கலயாணத்தை



நிறுத்துவது பற்றி பேசியது எல்லாம் பதிவாகியிருந்தது.

இது எப்படி?

அவள் திகைக்க... "எனது அறையில் கேமரா எப்போதும் சுழன்று கொண்டிருக்கும் அதன் மூலம் பதிவானது!" அவன் சொல்ல, "அப்படியானால் என்னை பிளாக் மெயில் செய்யப் பார்க்கிறீர்களா?" என்றாள் அவள் கொதிப்பாய்.

"கிட்டத்தட்ட அப்படித்தான். நீ மட்டும் நான் சொன்னபடி செய்யாவிட்டால் உன் தந்தையிடம் இந்த வீடியோ பதிவை காட்டி... எல்லாவற்றுக்கும் நீதான் மூலக் காரணம் என்று உன்னை உன் அக்காவையும் மாட்டி விடுவேன்.."

நிதானமான வார்த்தைகளால் அவளை மிரட்டவே செய்தான் யுகேந்திரன்.

அதிர்ந்து போனாள் சாருலதா.

அதன் பின் திட்டப்படி ஒவ்வொன்றாய் நடக்க ஆரம்பத்தது.

யுகேந்திரன் சொல்லி வைத்தாற் போல் அடுத்த பத்தாவது நிமிடத்தில் மொட்டைக் கடிதப் பிரச்சினையை எழுப்பினான். நண்பர்களின் உதவியுடன் அதை பெரிது பண்ணி கல்யாணத்தை

நிறுத்தினான்.

திகைத்துப் போயிருந்த தந்தையிடம் ஓடி வந்த சாருலதா தன் திட்டப்படி டியூட்டர் மோகன் பற்றி சொல்லி கமலினிக்கு தெரிந்தவர் அவர் கமலினியை கட்டிக் கொள்ள தயாராய் இருக்கிறார். இந்த மண்டபத்திலேயே இருக்கிறார்? அக்காவின் கல்யாணம் நிற்காமல் அவரையே கட்டி வைத்து விடுவோமே? எனக் கேட்க... வழியில்லாமல் அவர் தந்தை தலையசைக்கிறார்.

கமலினி மோகன் திருமண் நடைபெறுகிறது.

அதன் பின் யுகேந்திரன் திரும்பவும் உள்ளே நுழைந்த போது அவனது பிளான்படி குழப்பிய குடையை தெளிவு படுத்துகிறான்.

அதே மேடையில் சாருலதா யுகேந்திரன் திருமணமும் நடைபெறுகிறது.

எல்லாவற்றையும் கண்டு அதிர்ந்து போனது சாருலதா தான்.

## 8

சாருலதா அதிர்ந்து போய் விட்டாள்.

யுகேந்திரன் அவளுக்கு தாலி கட்டி விட்டான்!



அவளால் ஒன்றும் பேசமுடியாமல் வ ாய் திறக்க இயலவில்லை.

ஏதாவது பேசினால்... குட்டு வெளிப்பட்டு விடுமே. பின் அவளும் மாட்டிக் கொள்வாள்.

எல்லாம் இந்த யுகேந்திரன் வேலை!

டக்கென பிளானை தனக்கு சாதமாக மாற்றி தான் நினைத்ததை சாதித்து விட்டான்.

அவனைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அவனோ மாப்பிள்ளையாகிவிட்ட குஷியில் பல்லிளித்தப்படி எல்லோருடனும் கை குலுக்கி கொண்டிருந்தான்.

அவன் அடிக்கடி திகைப்பதைப் பார்த்து, “ரொம்பவும் யோசிக்காதே சாரு. போகப் போக எல்லாம் சரியாகிவிடும்.'' என உபதேசம் வேறு செய்தான்.

கடகடவென சடங்குள் நடந்தேறியது.

அன்று இரவே முதலிரவு வேறு

யுகேந்திரன் வீட்டிலேயே தடபுடலாய் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அவள் எவ்வித உணர்வுமின்றி ரூமில் அதே போல்

பால் செம்புடன் நுழைந்த போது கட்டில் மெத்தையில் உட்கார்ந்த படி காத்திருந்தான் அவன்

"பால் குடிக்கவெல்லாம் நேரமில்லை. உன்னிடம் நிறைய பேச வேண்டும்... " என்றான் எடுத்த எடுப்பில்.

அவள் அலட்சியமாய் முகம் வெட்டினாள். "பேச என்ன இருக்கிறது? வெற்றிகரமாக பிளான் போட்டு உங்கள் மிரட்டல் திட்டங்களைத் தான் நிறைவேற்றி விட்டீர்களே?'' என்றவள் விடாது. ''அதான் பார்த்தேனே மாப்பிள்ளைக் கோலத்தில் .... சந்தோஷத்தில் முகம் வெடித்து விடும் இளிப்புடன் பல்லைக் காட்டிக் கொண்டு இருந்தீர்களே...'' இப்போது உங்களுக்குத் திருப்திதானா?" என்றாள்.

யுகேந்திரன் மெல்ல கட்டிலை விட்டு எழுந்த வந்தான். கைகளைக் கட்டிக் கொண்டு ''என் நிலைமையையும் கொஞ்சம் புரிந்து கொள் வாணி" என்றான்.

"அப்படி என்ன உங்கள் நிலை"

"நானும் இப்படியே இருந்து விட முடியுமா? எனக்கும் உன்னை பிடித்திருக்கிறது?"

"அதற்காக?"

"நடந்ததை அப்படியே சொல்லட்டுமா....?"



"நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கத் தானே மூன்று முடிச்சு போட்டு கூட்டி வந்திருக்கிறீர்கள்? சொல்லுங்கள் கேட்டுத் தொலைக்கிறேன்.!" என்றாள் வெறுப்பாய்.

அவளது எரிச்சலைப் புரிந்து கொண்டாலும் புரியாதது போல் அவன் விளக்க ஆரம்பித்தான்.

"அன்று ஒரு நாள் தற்செயலாய் உன்னைப் பார்த்தேன் நான். உனது அபார அழகு... என்னை தடுமாற வைத்து விட்டது. எனக்காக நான் தேடிக் கொண்டிருக்கும் தேவதை நீதான் என என் மனதில் பட்டது. அந்தக் கணமேமுடிவு செய்து விட்டேன் என் வாழ்க்கையின் சரி பாதி நீ தான் என.."

சொல்லியவன் அவளிடம் எந்த சலனமும் இல்லாதது கண்டு, "என்ன கேட்கிறாயா?" என்றதும்,

''என்ன நீங்கள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தைக்கும் உம் கொட்டி தொலைக்க வேணுமா? சொல்லுங்கள்" என்று எரிச்சலை உள் அடக்கிய குரலில் சொன்னாள் இழுத்து வைத்த பொறுமையோடு.

அவன் ஏதோ சொல்ல, ஆரம்பிக்க முகத்தை வெட்டியவள், ''ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். என் அப்பாவிடம் சொல்லி மிரட்டி

என்னை மணந்தவர் நீங்கள். விதியே என கழுத்தை நீட்டியவள் நான். எனக்கு உங்களிடம் விருப்பமோ, ஈர்ப்போ, ஆர்வமோ கிடையாது. இல்லாத ஒன்றை திடீரென என்னுள் உருவாக்க எனக்குத் தெரியாது. அதனால் என்னால் உங்களுக்கு மனைவியாக நடிக்க கூட முடியாது...” என்றாள் வெறுப்பாக.

பதிலுக்கு அவனோ, “கொஞ்சம் நன்றாக யோசி சாரு, எது எப்படியோ இன்று முதல் நாம் கணவன் மனைவியாகி விட்டோம. நடந்து போன விஷயங்களை மறந்து இனி நடக்க வேண்டிய விஷயத்திற்கு வருவோம்.” என அவன் சொல்லி முடிப்பதற்குள், “எனது வாழ்க்கை இன்று காலையிலேயே முடிந்து விட்டது” என்றாள்.

“வாணி, நீ வீணாக பிடிவாதம் பிடிக்கிறாய், நான் நீ நினைப்பது போல் கொடூரமானவனோ, கொடுமைக்காரனோ அல்ல...”

‘‘பின் யாராம் ...?’’ என வெடுக்கென மொழிந்தவள், “ஒருபெண்ணை மிரட்டி உருட்டி பலவந்தப் படுத்தாத குறையாய் தாலி கட்டிக் கொள்வதற்கு பெயர் என்னவாம் என எடுத்தெறிந்து பொரிந்து தள்ளினாள் அவள்”

“யார் நானும் ஒரு சராசரி மனுஷன் தான் உன்



மேல் ... அதீதமாய் ஆசைப்பட்டவனும் கூட.....! அதை தவிர அடியேன் ஒரு பிழையும் செய்யவில்லை மன்னிப்பாயாக” எனக் கூறி பணிந்து நின்றான்.

அவன் செய்கையில் சட்டென கோபம் குறைந்த போதும் வீராப்பாய் “என் மேல் ஆசைப்பட நீங்கள் யார்?” என்றாள்.

‘‘பார்த்தால் தெரியவில்லை? நான் ஒரு ஆண்மகன்.. இந்த தகுதி போதா?” என்றவன் அவள் தன்னை முறைப்பதை பார்த்ததும், “இந்த முறைப்பை விட்டு,விட்டு நீயும் தான் என்னை ஒரு முறை நன்றாகப் பாரேன். எப்படி வாட்டசாட்டமாக..உறுதியான உடற்கட்டுடனும், செதுக்கினார் போன்ற முகத்துடனம் ஒரு கம்பீரமான களையுடனும் நான் இல்லாவிட்டாலும், பார்த்தவுடன மறுபடியும் பார்க்க தோன்றம் வசீகரம் கூடவா இல்லை என்னிடம்...ம்ம்?” என்று கேட்டு முகத்தை சீரியஸாக வைப்பவன் போல் அவன் நடிக்க..

அவளுக்கு சட்டென சிரிப்புத்தான் வந்தது. ஆனாலும் அவன் முன் சிரித்து விடக்கூடாதென பிடிவாதத்துடன் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டாள்.

அதை குனிந்து உற்றுக் கவனித்தவன்,

"வாய்விட்டு சிரித்தால் நோய் விட்டு போகுமாம் வாணி, அதனால் சிரித்து விடு"

"இல்லை என்றால் நான் சொல்லும் மொக்கை ஜோக்கை கேட்க வேண்டி வரும்..'' என்றான் மிரட்டலுடன்.

"ஜோக்.. அடிப்பீர்களா....? பதிலுக்கு நானும் அடிக்கிறேன்...." என்றாள் கைகளைத் தூக்கியவாறு.

"ஆஹா... ! இதுதான் சரியான ஜோக்!" எனக் கூறி கடகடவென சிரிக்க ஆரம்பித்தான்.

அவன் சிரிப்பை மனதுக்குள் ரசித்தவள் அது முகத்தில் தெரியாத படி வெகு ஜாக்கிரதையாய் "நீங்கள் இப்படியே சிரித்துக் கொண்டிருங்கள், எனக்குத் தூக்கம் வருகிறது..." என்றபடி விரிப்பொன்றை எடுத்து கீழே தரையில் விரித்தாள். தலையணையை எடுத்து போட்டுக் கொண்டு படுக்கப் போனபோது, "நீ மெத்தையில் படுத்துக் கொள். நான் அங்கு படுக்கிறேன்..." என்றான் அவன்

"இந்த கரிசனம் ஒன்றும் என்னிடம் வேண்டாம். பேசாமல் தூங்குங்கள்'' என்றபடி மேற்கொண்டு பேச்சுக் கொடுக்காமல் கண்களை இறுக



மூடிக்கொண்டு எதிர்புறமாய் திரும்பிப் படுத்துக் கொண்டாள் அவள்.

# 9

மறுநாளும் அதேபோல் ஒரு சம்பவம் வாணிக்கு நடந்தது. அன்று படுக்க வந்தவன் பார்வையிலே அவன் ஒருவித திட்டத்துடன் இருப்பது வாணிக்குப் புரிந்து விட்டது.

எப்படியும் அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்பது போல் நடமாடினாள்.

மாலையைத் தாண்டி இரவை நெருங்குகையிலே அவன் தேவையில்லாமல் அவளைப் பார்த்து இளிப்பதை உணர்ந்து உடன் புரிந்து கொண்டாள் அவள்.

கூடவே தெளிந்தும் கொண்டாள். என்ன ஆனாலும் சரி. உடன்படக்கூடாது! அவள் மட்டும் உடன் பட்டு விட்டால் பின் காலம் முழுவதும் அடிமை போல் அவன் காலடியில் தான் கிடக்க வேண்டும். பின் வேறு வழியே இருக்காது என்ற பயம்தான் கிலியாய்த் தோன்றி அவளைப் பிடித்து ஆட்டியது.

அதனாலேயே வேலைகளை முடித்து பால் தம்ளருடன் ரூமிற்குள் நுழைந்தவள் அவன் முகம் பாராமலே பாலை நீட்டினாள். கட்டிலில் அவனுக்கு சில அடி தூரமாகவே உட்கார்ந்தாள். வேண்டுமென்றே முகத்தை இறுக்கமாக்கி உம்மென்று வைத்துக் கொண்டாள்.

யுகேந்திரன் மட்டும் லேசுபட்ட ஆளா?

யமகாதகனாயிற்றே!

அவள் செய்கையிலேயே அவளின் மன ஓட்டத்தை புரிந்து கொண்டவன் அவள் எதிர்பாராத கேள்வியை வீசிஅவளை அதிர வைத்தான்.

"என்ன...ஒரே... அசதி...இன்றும் தூக்கமாய் வர ஆரம்பித்திருக்குமே...?" என்று ஆரம்பித்தான்.

சட்டென தான் நினைத்ததை அவன் கண்டு பிடித்தது கண்டு ஒரு கணம் திடுக்கிடவே செய்தாள் அவள்.

"அது...இல்லை.....இல்லை..." என கொஞ்சம் தடுமாறி வாய் குளறியவள், பின் இவனிடம் என்ன பயம்? எதற்கு மறைக்க வேண்டும்? என்ற வேகத்தில், "கொஞ்சம் தூக்கம் வருகிறது, தூங்கத் தான் வேண்டும்.." என்றே முடித்தாள்.



"தாராளமாய்த் தூங்கு...'' சட்டென சொல்லியபடி கைகளை நீட்டி படுக்கையை விசிறிக் காட்டினான் அவன்.

"உங்களுக்கொன்றும் இல்லையே...?"

"இல்லைதான்.." என இழுத்தவன், "என்ன உன்னிடம் ஒரு விஷயம் பற்றி கொஞ்சம் பேசலாம் என்று பார்த்தேன்.." என்றான் பீடிகையாய்.

"என்ன விஷயம்?'' என்றாள் அவள் சிறிது ஆவலுடன், ஆனால் வேணடுமென்றே முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டாள்.

"சொன்னால் உனக்கு ஆச்சரியமாய் இருக்கும், நானா இப்படியெல்லாம் பேசுகிறேன்... என்று வியப்படைவாய்.!" என்றான் மீண்டும் அவளிடம் ஆவல் வெளிப்படையாக தெரியாத என்ற ஆர்வத்துடன் அவள் முகத்தை நோக்கினான்.

"ம்ம்....சொல்லுங்கள்.."! என மறுபடியும் சிறு சலிப்பை முகத்தில் வரவழைத்துக் கொண்டவள் போல் நடித்தாலும், அவளது கண்கள் முழுமையாய் அவளைக் காட்டிக் கொடுத்தது.

அவனும் அவள் கண்களை உற்று நோக்கி அவள் உள்ளத்தை அரிய முயன்ற படி அவளைப் பார்த்த

படியே பேச ஆரம்பித்தான்.

"உன் அழகைப் பற்றி..! உனது அழகை நான் ரசிப்பது... பற்றி...! எனது மதிப்பீடு பற்றி..!" லேசான வெட்கச் சிரிப்புடன் சொல்லியபடி அவன் அவளை நேருக்குநேர் அவள் கருவிழிகளை ஊடுருவுவது போல் உற்றுப் பார்த்தான்.

அவளுக்கோ ஆவல் அதிகரித்தது. இவ்வளவு வாய் கிழிய மற்ற விஷயங்களைப் பேசுகிறவன் எல்லோரும் புகழும் அவளது அழகு பற்றி என்னதான் நினைப்பான்? நினைத்திருக்கிறான்?

இல்லை... அதற்கும் வேதாந்தம் போல் ஒரு கருத்தை சொல்லி நியாயப்படுத்துவானா? என்னதான் சொல்கிறான் பார்ப்போமே!

ஆர்வமாய், சொல்லுங்கள்..! சொல்லுங்கள்..! என்றாள் அவள்.

''உனக்கு தூக்கம் வருகிறது என்று சொன்னாயே...?" என மறுபடியும் இழுத்து கூற அவளும் விடாமல் "அதனால் என்ன நீங்கள் சொல்வதை சொல்லுங்கள் நான் கேட்டு விட்டே தூங்கிக் கொள்கிறேன்" என்றாள் அசட்டையாக.

அவன் தொண்டையைச் செருமிக் கொண்டு சரி



செய்வது போல் வைத்து விட்டு பேச்சை ஆரம்பித்தான், "நான் முதலில் ரசித்தது, உன்னிடம் எனக்கு மிகவும் பிடித்தது எது தெரியுமா?" எனக் கேள்வி போல் கேட்டுக் கொண்டே, "மயக்கம் தரும் உன் மைவிழிக் கண்கள் உன் உதடுகள் பேசாவிட்டாலும் கதை பேசும் உன் காந்த விழிகள் "என்றான்.

பின் தொடர்ந்து "அதை பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறது. அதற்குப் பின் உதட்டோரம் கரும்புள்ளி போல் தெரியும் அந்த அழகான மச்சம், நீ புன்னகைக்கும் போது தெரியும் உன் முத்துப்பற்களின் வரிசை, நெற்றியோரமாய் ஸ்டைலாய் வந்து புரண்டு கொண்டிருக்கும் சுருளான ஒரு முடிக்கற்றை, பிறை நெற்றி, கூரான நாசி, சிற்பி செதுக்கி சிலை வடிவம்...ம்ம்... இன்னும்..."

"போதும்...! போதும்!" என்றாள் கைகளை உயர்த்தி கத்தியபடி, இவன் ஏதோ ஒரு திட்டத்துடன் தான் இப்படியெல்லாம் பேசி ஐஸ் வைக்கிறானோ என்ற சந்தேகம் தோன்றினாலும், அவன் நேருக்கு நேராக அவளது அழகைப்பற்றி அப்படி புகழும் போது அவள் மனமும் தடுமாறத்தான் செய்தது. அதனால் அவள் கன்னங்கள் சூடேறி முகம் சிவப்பதை தடுக்க முடியாமல் தான் அவள் அப்படி கத்தி அவன் பேச்சை

நிறுத்தினாள்.

அவனும் அவள் படபடப்பை பார்த்ததும் தன் பேச்சை நிறுத்தி அவளை ஆழப் பார்த்தான்.

"என்ன? சொல்ல வேண்டாமா? சொல்வதற்கு இன்னும் நிறைய இருக்கிறதே என் நெஞ்சுக்குள்.... அதற்குள்.. வேண்டம் என்றால் எப்படி... என்றான்..." கண்களில் வழிந்தோடும் காதலுடன்...

"வேண்டாம். எனக்குத் தூக்கம் வருகிறது.."

அவள் உள்ளூர ஆர்வம் கொண்டிருந்தாலும் பிடிவாதமாய் மறுத்து விட்டு படுக்கப் போனாள்.

மெத்தையில் அவனுக்கு மறுபுறமாய் முதுகை காட்டி திரும்பி படுத்தவள் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

அவன் அதையும் உற்றுப்பார்த்து விட்டு "இப்படி கண்களை இறுக மூடி நீதூங்கும் விதம்கூட பார்க்க ஒரு குழந்தைதனத்துடன் அருமையாக இருக்கிறது.." என்றான்.

அவளால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. கண் திறந்து சட்டென கலகலத்து சிரித்தாள். உடனே நிலைமை உணர்ந்து இறுக்கமாகி கண்களை மூடிக் கொண்டாள்.



கண்களை அப்படி இறுக்கமாக மூடியிருந்தாலும் அவன் தன்னையே இன்னும் உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதை அவளால் உணர முடிந்தது.

தூங்குவது போல் கண்களை இறுக மூடியபோது அவன், "இன்னொரு விஷயம்..." என்றான்.

அவள் பேசாமல் இருக்கவும், "உன்னிடம்தான் சொல்கிறேன்..." என்றான்.

"காதைத்திறந்து தான் வைத்திருக்கிறேன். சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்...!"என்றாள்

ஒரு கணம் தன் உணர்ச்சிகளுடன் விளையாடி தன் நிலையை கண்டு பிடித்து விட்டானே என்று ஆத்திரம் என்ற அசட்டுத்தனம் அவளை எரிச்சலாய் குடைந்தது.

யுகேந்திரன் திரும்பி அவள் பக்கம் பார்த்தவாறு "சாரு என் மீது இருக்கும் கோபம் ஆத்திரம் என்று தான் உனக்கு அடங்கும்" என்றான்.

"சூரியன் மேற்கில் உதிக்கிறதோ அன்று தான் அடங்கும்..." என்றாள் அவள் பதிலுக்கு.

"அவ்வளவு ஆத்திரமா என் மேல்...?"

ம்ம் என தலையசைத்தவள், அதே கோபத்தில் கைகளை விரித்து காட்டி, "விட்டால் கொலை கூட

செய்து விடுவேன். சட்டத்திற்கா பயப்படுகிறேன்....." என்றாள் தன் பேச்சை உணராமலே.

யுகேந்திரன் அதிர்ந்து போனவனாய் அவளைப் பார்த்தவன்,"அப்படி கொலை செய்யும் அளவுக்கா தவறைச் செய்து விட்டேன்....?" என்றவன் தொடர்ந்து "ஆனாலும் வாணி நீ கோபத்தில் இப்படியெல்லாம் பேசக்கூடாது. கொஞ்சம் இனிமையாக பேச வேண்டும்...." என முடித்தான்.

ஆத்திரத்தில் பேசிய தன் தவறை உணர்ந்தாலும் உணராதவள் போல், "நான் இப்படித்தான் பேசுவேன். ஒருபெண்ணை மிரட்டி உருட்டி கட்டாயமாக மணந்து அவளது எதிர்காலத்தை இருளடிக்க நினைப்பவர்களிடம் இப்படித்தான் பேச முடியும்...." என்றாள்.

"என்ன உன் எதிர்காலத்தை நான்... நான் இருளடிப்பேனா...? என்ன சொல்கிறாய் நீ?" என அவன் கேட்டதற்கு அலட்சியமாய் தோள்களை குலுக்கினாள்.

''என் கனவுகளை எல்லாம் சிதைத்து விட்டீர்கள்...." என்றாள் சுருக்கமாய்.

"என்ன கனவு வைத்திருந்தாய்?"

"கனவுகள் கலைந்த பின் கலைத்தவனிடமே



போய் சொல்லி என்ன லாபம்?" என எதிர்கேள்வி கேட்டவள். அவன் மீண்டும் ஏதோ பேச்சை ஆரம்பிப்பதற்குள், "எனக்கு தூக்கம் வருகிறது. தூங்கப் போகிறேன்...! " என திரும்பிக் கொணடாள். போர்வையை இழுத்து முகம் வரை மூடியும் கொண்டாள்.

இருந்தாலும் யுகேந்திரன் சமாளித்துக் கொண்டு, "உன்னை மனதார விரும்பினேன். விரும்புகிறேன். அது அவ்வளவு பெரிய குற்றமா?"என்றான் ஒருவிதமான தொனியில்.

அதற்குப் பதில் சொல்லாமல் இருந்தாள் அவள்.

அன்று இரவு தூக்கமில்லாமல் தான் புரண்டாள். படுக்கையில் எதிர் எதிர் துருவங்கள் போல் தினம், தினம் படுப்பது அவஸ்தையாக இருந்தது. வாழ்நாள் முழுவதும் இதே ...கோலம் தொடருமா? என்ற பயமும் எழுந்தது.

மேலும் இந்த அவஸ்தை தனக்கு மட்டுமல்ல, அவனுக்கும் தான் என்ற உணர்வும் அவளுள் ஓடிற்று.

தினம் சண்டைக்கோழி போல் அவனுடன் வார்த்தைகளால் மோதுவம் சண்டையிடுவதும் இன்னும் எத்தனை நாளைக்கு? என்ற சலிப்பும் அவளுள்

உண்டாயிற்று.

கூடவே யுகேந்திரன் ஒருவித கெஞ்சல் தொணியில், "உன்னை மனதார விரும்பியது தவிர நான் செய்த தவறு தான் என்ன?" என்று கேட்டதும் அவளை திகைக்க வைத்தது.

அவன் சொல்வது உண்மைதானே? அவளை விரும்பியதுதானே அவன் செய்து? அவளை எப்படியும் தன் மனைவியாக்கிவிட வேண்டும் என்ற மோகத்தினால் தானே அவளை மிரட்டி பணியும் வைத்தான்? அவள் மீது ஆசைப்பட்டதினால் அவன் வகுத்துக்கொண்ட வன்முறை தானே அது?

மனம் கேள்விகளை எழுப்பிய போதும் அதை திடமாக மறுத்தாள் சாருலதா.

ஆசைப்பட்டால் விரும்பினால் முறைப்படி பேசி அவள் சம்மதம் பெற முயன்றிருக்கலாம்... முயற்சி செய்திருக்கலாம்..அதை விட்டு விட்டு அவளுக்கென்று ஒரு மனம் இருக்கும் என்பதை கொஞ்சமும் புரிந்து கொள்ளாதது அடாவடித்தனமாய் அவளது சூழ்நிலையைக் காட்டி மிரட்டி..உருட்டி.. அப்போது... இந்த யுகேந்திரன் கண்களை உருட்டி உருட்டி பேசிய அந்த வில்லத்தனம் அந்த விரட்டல் எல்லாம் அவள் நெஞ்சில் ஆழமாய் பதிந்து விட்டனவையே..! மறக்கக்



கூடியவைகளா அவைகள்...! அப்படிப்பட்ட வில்லன் ஒருவன் இன்று கணவனாகிவிட்டால் எல்லாம் சரியாகிவிடுமா?

அப்படி அன்று நெஞ்சு துடிக்க வைத்தான் இன்று தாலியை கட்டி பழையவைகளை மறந்து விடு... என்றால்... எல்லாவற்றையும் மறந்து விடுவதா? அல்லது தாலி கட்டிய கணவனாய் அவன் ஆகிவிட்டான் என மன்னித்து விடுவதா?

இரண்டும் ஒரு போதும் என்னால் முடியாது..! ஆத்திரமாய் தனக்குத்தானே பேசிக்கொண்டு பற்களைக் கடித்தாள் சாருலதா

## 10

இருவாரம் சென்று விட்டது. சாருலதா கொஞ்சமும் மாறவில்லை. சீறிப்பாயும் புலியாகவே யுகேந்திரனிடம் நடமாடினாள். அவள் எது சொன்னாலும் கோபப்பட்டாள்.

அவன் மிரட்டல்காரன், மற்றவர் உணர்வுகளை புரிந்து கொள்ளாத ரவுடி என்றே அவள் மனதில் பதிந்து விட்டது.

ஆனால் யுகேந்திரன் அதற்கு நேர்மாறாய்

நகைச்சுவை உணர்வுடன் இருந்தான். அவள் சீறினாலும் கோபப்பட்டாலும் அதிலும் ஹாஸ்யத்தை ஏற்படுத்தி சிரிக்கவே செய்தான்.

நேற்றுக்கூட இப்படித்தான் அவளை ஷாப்பிங் அழைத்துச் செல்கிறேன் என வெளியே கூட்டிப் போனான். வேண்டா வெறுப்பாய்த் தான் இவளும் கிளம்பி பின்னால் உட்கார்ந்தாள்.

அவன் நகரின் பெரிய பஜாரில் வண்டியை நிறுத்தி கடைகளைக் காட்டினான். "உனக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொள்...!" என்றான்.

அவளும் அக்கரையாய் போவது போல் ஐந்து நிமிடங்களில் திரும்பி வந்தாள்.

"என்னவாங்கினாய்?" என்று கேட்டபோது கைகளை விரித்துக் காட்டினாள். "உங்களுக்குத் தேவைப்படுமே ...முதுகில் குத்துவதற்கு!" என்றாள்.

பார்த்த அவன் அதிர்ந்து போனான். அது சிறிய கூரான கத்தி!

"சாருலதா என் மேல் உள்ள கோபம் இன்னுமா தீரவில்லை உனக்கு" என்றான் அதிர்ந்து போன குரலில்.

"தீரவே... தீராது ...!" என்றாள் அமைதியாக.

"எவ்வளவு நாட்கள் தான் இப்படியே இருக்கப் போகிறாய்?"

அதற்கும் அவளிமிருந்து சட்டென பதில் வந்தது.

"ஆயுள் முழுமைக்கும்...." என்றாள்.



அதன் பின் யுகேந்திரன் ஒன்றுமே பேசவில்லை. இரண்டு நாள் கழித்து வேலை முடிந்தது சீக்கிரமே திரும்பி வந்தவன் வாடகை டாக்ஸி ஒன்றில் வந்து இறங்கினான்.

"அப்போதும் முகத்தை திருப்பியபடி இறுக்கமான உதடுகளுடன் அவள் இறுப்பதைப் பார்த்து, எங்கு போகிறோம் எனறு கேட்கமாட்டாயா? "என்றான்.

"அவசியமில்லை! தெரிந்து என்ன ஆகப் போகிறது?" என வெடுக்கென மறுமொழி கூறினாள்.

"சொன்னால் ஆச்சரியப்படுவாய்....!" என்றான் அவன் விடாமல்.

"என் வாழ்வில் ஆச்சரியங்களும், அதிர்ச்சிகளுக்குமா பஞ்சம். இனி வருவதற்கு ஒன்றுமில்லை...! "என்றாள் வெறுப்புடன்.

"இல்லை.... நீ பெரும் அதிர்ச்சி கொள்ளப் போகிறாய்! அந்த ஆச்சரியத்தில் அதனால் எழும் சந்தோஷத்திலும் ...என்னைக கட்டிக் கொண்டு முத்தம் கூட தரலாம்" என்றாள் கண்களில் சிரிப்புடன்.

அவளும் பதிலுக்கு விடாமல் தன் கை விரல்களைப் பார்த்துக் கொண்டே, "இன்று பார்த்து என்னவென்று தெரியவில்லை. இந்த கைவிரல்கள் பரபரவென துடிக்கத்தான் செய்கிறது... என்ன நடக்கப் போகிறதோ.. தெரியவில்லை?" எனவும் முகம் மாறி வாயை மூடிக் கொண்டான் யுகேந்திரன்.

அடுத்து வந்த இரண்டு வாரங்களில் யுகேந்திரன் நடவடிக்கைகளில் பெரிதும் மாற்றங்கள் ஏற்பட்டது.

அவள் முகம் வெட்டினாலும், சுடு சொற்களால் சுட்டாலும் அவள் பின்னாலேயே வந்து நகைச்சுவை ததும்ப ஏதாவது சொல்லிக் கொண்டு திரிபவன் அதை அறவே நிறுத்தினான். சொல்லப் போனால் முன்பு போல் இல்லாமல் அவளுடன் பேசுவதையே குறைத்தான். அவள் எப்படி அவனை சிறிதும் பொருட்படுத்தாமல் இருப்பாளோ அதுபோல் அவனும் சட்டை செய்யாமல் நடமாட ஆரம்பித்தான்.

எதனால் இந்த திடீர் மாற்றம்? என அவள் அதிர்ச்சியாய் யோசித்து சிந்திக்கையில் அந்தத் தகவலும் பணியாள் ஒருவர் மூலமாக அவளுக்கு கிடைத்தது.

அவனது அலுவலகத்தில் புதிதாய் ரோஸி என்பவள் வேலைக்கு சேர்ந்திருக்கிறாளாம். அவள் யுகேந்திரனின் செகரட்டரியும் ஆவாளாம். அவள் வந்ததில் இருந்து திவாகரன் அவள் பின்னாலே சுற்றுகிறானாம்.

வேலை நேரங்கள் தவிர மற்ற நேரங்களில் பார்க், பீச், சினிமா என்று இருவரும் சுற்றுகிறார்கள் என்ற தகவலும் அவளது காதுகளுக்கு வந்தது.

நம்பமுடியாமல் விசாரித்த போது ...அது உண்மைதான் என அவளுக்கு கிடைத்த பதில் மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அது போதாதென்று அடுத்து வந்த இரண்டு



தினங்களில் யுகேந்திரன் அந்த ரோஸியை வீட்டிற்கே டின்னர்சாப்பிடுவோம் என கூட்டி வந்துவிட்டான்.

அவள் சமைத்து வைத்த உணவு வகைகளை டைனிங் ஹாலில் ரோஸியை உட்கார வைத்துப் பரிமாறியபோது அவளுக்கு எழுந்த ஆச்சரியத்திற்கு அளவேயில்லை.

மேலும் அந்த ரோஸியை உற்றுப் பார்த்த போது இன்னொரு விஷயமும் புரிந்தது.

ரோஸி ஒரளவுக்கு கறுப்பாய் இருந்தாலும் அழகியாய்தான் தெரிந்தாள். நவநாகரீகமாய் ஜீன்ஸ் பேண்ட், டீ ஷர்ட்டில் பாப் கட் முடியுடன் அவள் ஸ்டைலாய் உட்கார்ந்திருக்கும் அழகு... வார்த்தைக்கு வார்த்தை யுகேன் ... யுகேன் ... . என யுகேந்திரனை கொஞ்சி கொஞ்சி அழைத்தபடி பேசி விதம்.. என எல்லாமே யுகேந்திரனை மயக்க வந்த சிங்காரி இவள்தான் என்பதை உணர்த்தியது. இவளிடம் யுகேந்திரன் மாட்டிவிடக்கூடாது...! என்ற பயத்தையே கொடுத்தது.

மேலும் பத்து நாட்கள் ஓடியது.

ஒழுங்காய் வேலை முடிந்து வீடு வந்து கொண்டிருந்த யுகேந்திரன் இரவு வெகு தாமதமாய் வீடு வர ஆரம்பித்தான். அவள் முகம் கொடுத்து நின்றாலும் சட்டை செய்யாமல் அவளைக் கடந்துபோனான்.

பொறுக்க முடியாமல் ஒருநாள் கேட்டு சண்டையிட்டாள் சாருலதா.

"யார் அந்த ரோஸி.... ? அவளுடன் எதனால் இப்படி ஒரு நெருக்கம்?" என்றாள்.

'அப்படியா? அதை பார்த்து விட்டாயா?'' என்றான் சர்வசாதாரணமாய்.

'ஆமாம்.. என் இரண்டு கண்களால் பார்த்து தினம் தினம் பூரிப்படைகிறேன்... விஷயத்தைச் சொல்லுங்கள்..." என்றாள் கொதிப்பாய்.

'எதைச் சொல்வது?" என்றான் அவன் பதிலுக்கு.

'எதனால் அவளுடன் அப்படி கொஞ்சிக் குலாவுகிறீர்கள்...?'' என்றாள் பொறுமையை இழுத்துப்பிடித்தபடி.

'அதைக் கேட்க நீ யார்..?"

கேட்டபடி திரும்பி அவன் பார்த்த பார்வையில் பொறி பறந்தது.

'நானா...? நான் உங்கள் தாலி கட்டிய மனைவி...!"

அவள் சொல்லியதும் கடகடவெனச் சிரித்தான். அவள் எரிச்சலானாள்.

'எதற்குச் சிரிக்கிறீர்கள்?"

'அந்த மனைவி உரிமையைத்தான் எனக்கு நீகொடுக்கவில்லையே...! வாயை மூடு!" என்றான் அவன் விரட்டலாய்.

நிஜமாகவே அவள் அவனது பதிலில் வாயை மூடிக் கப்சிப் ஆகி விட்டாள். அவன் சொல்வது உண்மைதானே?



அவளை இன்னும் கணவன் என்று ஏற்றுக் கொள்ளாத போது எந்த உரிமையில் மனைவி போல் அவனை கேள்வி கேட்க முடியும?

திகைத்து ஒடுங்கினாள் அவள்.

மேலும் வந்த பத்து நாட்களில் யுகேந்திரன் நடவடிக்கைகள் இன்னும் விபரீதமானது. தினம் தினம் ரோஸியை வீட்டுக்கு கூட்டி வருவதும் இருவரும் முன்ஹால், மொட்டை மாடி என உட்கார்ந்து மணிக்கணக்காய் பேசுவதும்... அதையெல்லாம் கண்ணிருந்தும் குருடு போல் அவள் பார்த்துக் கொண்டிருப்பது மிகவும் எரிச்சலைக் கிளப்பியது.

யுகேந்திரனிடம் எதாவது கேட்டு சண்டை போடப் போனால் 'எந்த உரிமையில் இப்படி என்னிடம் கேள்விகள் கேட்கிறாய்?" என எதிர் கேள்வி கேட்டு அவள் வாயை அடைத்துவிடுகிறான்.

அவளுக்கு சில சமயம் என்ன செய்வதென்றே தெரியவில்லை.

போர்களத்தில் ஆயுதம் இல்லாமல் சண்டையிட நிற்கும் நிராயுதபாணி போல் தன்னை உணர்ந்தாள் அவள்!

முன்பு யுகேந்திரன் மேல் கொண்டிருந்த கோபம், எரிச்சல், ஆத்திரம் எல்லாம் இப்போது எங்கே என தேடும் அளவுக்கு ... அவளது சுபாவம் மாறியிருந்தது.

நாளுக்கு நாள் யுகேந்திரன் அவளைத் தவிர்த்த விதம், ரோஸியுடன் பழகுவதில் காட்டிய நெருக்கம்...

நாம் இனி யுகேந்திரன் தேவையில்லாத ஒரு பொருள் போல் ஆகிவிட்டோமோ...? என அவளை நினைக்க வைத்தது.

மேலும் ஒரு பத்து நாட்கள் தூங்காமல் கொள்ளாமல் நிலையில்லாமல் இருந்தாள். கடைசியில் மனம் வெறுத்தவள் போல் துணிந்து ஒரு முடிவும் எடுத்தாள் அவள்!

## 11

சாருலதா நெடுநேரம் யோசித்திருந்தாள்.

இறுதியாய் அந்த முடிவிற்கு வந்தாள்.

அன்று மதியம் அலுவலகம் முடிந்து திரும்பிய யுகேந்திரனிடம். 'உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்..." என்றாள்.

யுகேந்திரனோ அவள் பக்கம் திரும்பக் கூட செய்யாமல் ,'எனக்கு நிறைய வேலை இருக்கிறது. ரோஸி எனக்காக காத்திருப்பாள். நிறைய என்கேஜ்மெண்ட்கள் வைத்திருக்கிறோம். நான் உடனே கிளம்ப வேண்டும்!" என்றான்.

'ரோஸிக் காத்திருப்பாள் கிளம்ப வேண்டும்." என்ற அவனது வார்த்தைகள் மீண்டும் அவளை இம்சிக்க வேதனை கொண்டவளாய், 'ரோஸியைப் பற்றித்தான் பேசப் போகிறேன்....'' என்றான் அழுத்தமான குரலில்.

யுகேந்திரன் ஏதோ தேடிக் கொண்டிருந்தவன்



நிறுத்தி விட்டான்.

நிமிர்ந்து பார்வையை சுருக்கிய படி அவள் பக்கம் வந்தான்.

'ரோஸியைப் பற்றியா? அவளுக்கென்ன?"

அவளுக்கு டக்கென வார்த்தைகள் வரவில்லை. சமாளித்துக் கொண்டு மெல்ல மெல்ல வார்த்தைகளை விட்டாள்.

'நான் ... நான் ...போகிறேன்... இனி... இனி. இங்கு.. என்... இடத்தில் அந்த ரோஸியைக் கொண்டு வந்து வைத்துக் கொள்ளுங்கள்... நீங்கள் .... நீங்கள்...சந்தோஷமாய் ...இருங்கள்... நான் உங்களுக்கு விடுதலைப் பத்திரம் கொடுத்து கையெழுத்திட்டு சட்டப்பூர்வமாகவும் விலகி... விடுகிறேன்..."

அவள் திக்கி திணறி ஒருவாறு பேசி முடிப்பதற்குள் பளீர்ரென அவளது கன்னத்தில் யுகேந்திரனின் கைகள் பொறி பறக்க இறங்கியது.

ஆங்...! என்ற அலறலுடன் கன்னத்தைப்பிடித்துக் கொண்டாள்.

அவன் அடித்ததாலும், கொண்டிருந்த பயத்தாலும் அவள் உடம்பே நடுங்கியது.

அப்படி நடுங்கியவளை இழுத்து ஆவேசமாய் அணைத்தான். நெஞ்சினில் இறுகப் பொதிய வைத்துக் பிடித்துக் கொண்டான் அவன்.

'கொஞ்ச நேரம் அப்படியே இரு. அப்போது தான் உனக்குப் புத்தி வரும்!'' என்றவன் தொடர்ந்து,

'என்ன... என்ன... வார்த்தைகள் பேசி விட்டாய்.. உன்னை.. உன்னை..” என்றபடி மறுபடியும் அவளை வேகமாய் நெஞ்சினில் இறுக்கினான். முகம் நெற்றி கன்னம் என ஒன்றுவிடாமல் முத்தமாரி பொழிந்தான்.

'உனக்கு உண்மையைப் புரிய வைக்கத்தான் இந்த ரோஸி நாடகம்...” என்றவன் அவளை விடுவித்து பின் சட்டென அவள் முகம் நிமிர்த்தி, 'இப்போது புரிந்ததா ? எனக்கு வேண்டியது... நீயும்... உனது அன்பும் மட்டும் தான்! ரோஸியல்ல....!” என்ற போது மலங்க மலங்க விழித்தவளுக்கு அவன் சொல்வது எல்லாம் மூளையில் உரைக்கவும் செய்தது.

இருந்தாலும் முழுவதும் தெளிவு படுத்திக் கொள்ள விரும்பியவளாய் அவனைப்பார்த்தாள்.

'அப்படியானால்... அவள்.. அவள்.. அந்த ....ரோஸி? உங்கள் செகரட்டரி...?”

அவன் கடகடவென சிரித்தான். பின் நிறுத்திவிட்டு, 'நீ நினைப்பது போல் ரோஸி ஒன்றும் என் செகரெட்டரி அல்ல. அவள் என்னுடன் கல்லூரியில் ஒன்றாய் படித்தவள். தற்போது நாடக சபா ஒன்றில் முழுநேர நாடக நடிகையாய் இருக்கிறாள். தற்செயலாய் ஒரு நாள் அவளைப் பார்த்து பேசி கொண்டிருக்கையில் அவள் என் முகவாட்டத்தை பார்த்து, என்ன குடும்பப்பிரச்சினையா? என்ன விஷயம் ? என்று கேட்டாள். நானும் நீ பாராமுகமாய் வெறுப்புடன் நடந்து கொள்வது பற்றி விளக்கினேன்.

உடனே அவள் தான் பெண்களின் மனது



இப்படித்தான். அதை சரிபண்ண ஒரு வழி இருக்கிறது. அதற்கு நான் உதவி செய்கிறேன்... என்று சொல்லி என்னுடைய செகரட்டரியாய் நான் நெருங்கி பழகும் காதலி போல் நடிக்க ஆரம்பித்தாள். வேண்டுமென்றே உன் முன்னால் நீ போகும் இடங்களை தெரிந்து கொண்டு நாங்கள் இருவரும் ஜாலியாக சுற்றுவது போல் நடித்து உன்னை வெறுப்பேற்றினோம். இப்படி நாங்கள் நடித்த நடிப்பில் நீயும் நாங்கள் நினைத்தது போலவே சலனப்பட்டிருக்கிறாய்... உண்மையான உன் மனதை உணர்ந்திருக்கிறாய்...”

என அவன் முடிப்பதற்குள் அவள் பலமாய் தலையசைத்தாள். 'ஆமாம்..ஆமாம்.. ரோஸியுடன் நீங்கள் நெருங்கி பழகுவது போல்தெரிந்ததும் தான் எனது உள் மனது விழித்து... பயங்கரமான பதட்டம் வந்தது...எங்கே.. என்னைவிட்டு நீங்கள் போய்விடுவீர்களோ? உங்களது அன்பு எனக்கு கிடைக்காமல் போய் உங்களை இழந்து விடுவேனோ. என்ற பயமெல்லாம் வந்தது.... அப்போது தான் வெளியே வெறுப்பு காட்டினாலும் உள்ளுக்குள் உங்களை நான் எவ்வளவு நேசித்திருக்கிறேன் ... என்பது எனக்கே முதல் முறையாய் புரிந்தது.” என்றபடி அவள் தன் தலையையே தட்டிக் கொள்ள தடுத்த யுகேந்திரன் “இப்போதாவது புரிந்து கொண்டாயே? இன்னும் பல நாட்கள, பல மாதங்கள் ஆகிவிடுமோ...” என்று நான் பயந்து கொண்டல்லவா இருந்தேன்....என்றான்

அவள் மறுபடியும் தனக்குத்தானே குமைந்தவள்,

சரியான மரமண்டை நான், உங்கள் மீது எவ்வளவு வெறுப்பு காட்டிருக்கிறேன்.? ஏன்..ஏன்? எனக்கே புரிய வில்லை....நீங்கள் நீங்களே... சொல்லுங்கள்" என்றாள்.

அவன் சிரித்தபடி சொல்கிறேன், 'சாருலதா, நான் கட்டாயப்படுத்தி உன்னை மணந்ததினாலேயே உள்ளுக்குள் நீ விரும்பினாலும் ... வெளியே ஏற்பட்ட காயம் அது ஆறாமல் உன்னை உறுத்திக் கொண்டே இருந்திருக்கிறது. அப்படி மட்டும் மிரட்டாமல் இயல்பாய் நம் இருவருக்கும் திருமணம் நடந்திருந்தால் நன்றாயிருக்குமே...அதைவிட்டு விட்டு தடியால் அடித்து கனிய வைப்பது போல் நான் செய்து செயல் பலமாய் உன் மனதை பாதித்து விட்டது. அதன்வெளிப்பாடே....நீ ...என் மீது காட்டிய அதீத வெறுப்பு. மேலும்..."

அவன் நிறுத்த 'சொல்லுங்கள்.. " என்றாள் ஆவலாய்.

அவன் குறுஞ்சிரிப்புடன் தனது நெஞ்சை காட்டி, 'நீ கேட்க வேண்டியது இந்த இடத்தில் இருந்து கொண்டுதான் ..." எனவும் மறுபடியும் அவனது நெஞ்சினில் ஒண்டிக்கொண்டாள்.

அவன்தொடர்ந்து, 'எனக்கே சில சமயம் நீ காட்டும் அதீத வெறுப்பைப் பார்த்து எங்கே உனக்கு என்னை நிஜமாவே பிடிக்காமல் போய்விட்டதோ என பயந்தே விட்டேன். அதை வெளியே வரவழைக்கத்தான் இப்படி உன்னை சட்டை செய்யாதது போல் ரோஸியிடம் நெருங்கிப் பழகுவது



போல் எல்லாம் நடித்தேன். உன்னை பயப்பட வைத்தேன். நான் எதிர்பார்த்தது போலவே நீயும் மனதால் பயந்து ...மாறிவிட்டாய். உண்மையை உனக்குள்ளே ஒளித்து விட்டாய். ..என்ன விளக்கம் போதும் தானே? " என்ற படி குனிந்தவன் டக்கென பட்டானஅவளது இதழ்களில் ஒற்றியெடுத்தான்.

அதில் பரவசமானவள் வெட்கம்பொங்கவே நிமிர்ந்து, "என்னை மன்னித்து விடுங்கள். உங்களை ரொம்பவே நோகடித்து விட்டேன். ..." என சொல்ல பதிலுக்கு அவனும் "நீயும் அப்படியே ஒரு விஷயத்திற்கு என்னை மன்னித்துவிடு" என்றான்.

"என்ன அது...? " என்றாள் வில் புருவங்கள் உயரும்படி ஆச்சரியத்துடன்.

உன்னை கட்டாயப்படுத்தி மணமுடித்தது நான் செய்த தவறுதானே... அதற்காக என்னை மன்னித்து விடு...! என்றான் குரலில் கெஞ்சி, கொஞ்சியபடியே.

''மன்னிக்கிறேன்! ஆனால் அப்படி மன்னிப்பதிலும் எனக்கு பெரும் சந்தோஷம் தான் ஏன் தெரியுமா?" என்றாள்

'ஏன் ...? நீயே.... சொல்...!" என்றான் ஆர்வமாய்.

"அவ்வளவு அன்பு என் மீது வைத்திருக்கிறீர்கள்... அவ்வளவு ஆசை என் மீது கொண்டிருக்கிறீர்கள்.. அதனால் தானே.... புரவியில் வந்து தூக்கிக் கொண்டு போகும் ராஜகுமாரன் போல் என்னை அலாக்காக நிர்பந்தம் செய்து கட்டிக் கொண்டீர்கள்...!"

'உண்மைதான்! என தலையசத்தவன் அதே தலையசைப்புடன், நான் ராஜ குமாரனோ இல்லையோ நீ...கண்டிப்பாக ராஜகுமாரிதான்!'' இந்த அழகு ராஜகுமாரியை இனி என் இதயக் கோவிலில் வைத்து தினம் தினம் பூஜிக்கப் போகிறேன். ஆசை தீர ரசித்து அப்படியே...உன்னை..'' என ஆவலாய் சொல்ல ஆரம்பித்தவன் அப்படியே நிறுத்தி குறும்புடன் அவளைப் பார்த்தான்.

அவள் குங்குமமாய் சட்டென சிவந்து போன முகத்தை அழகாக வெட்டினாள், 'போதும், போதும். .. இனி ...சொல்ல வேண்டியது, செய்ய வேண்டியது என்முறை. என்ன வெட்கம் கொஞ்சம் தடுக்கிறது. அதான்... என்றபடி சட்டென குனிந்து அவனை தன்நெஞ்சோடு இறுக்கினாள். அவளது அதரங்களில் தனது பட்டான இதழ்களால் ஆசையாய் முத்தமிட ஆரம்பித்தாள்.'' இருவரும் தங்களை மறக்க ஆரம்பித்தனர்.

(முற்றும்)





**கவியகம்**
**மணியன்**

# புத்தாண்டே வருக -2015

பூத்தது பூத்தது புத்தாண்டு
பூரிக்கின்றது மனசெல்லாம்
பாத்தது பாத்தது வழியெல்லாம்
பல்லா யிரமொளி தெரிந்ததனால்
காத்தது காத்தது கடவுளடா – நமை
காப்பது என்றும் கடவுளடா!


நாளைய பொழுது நலமாகும்
நம்பிக்கை வைப்போம் தோழர்களே!
காலையில்எழுந்து நடந்தாலே
சர்க்கரை நோயும் அண்டாதே!
வேலையில் கவனம் வைத்திடுவோம்
வேர்களை என்றும் மதித்திடுவோம்!

உழைப்போம் உழைப்போம் உயர்ந்திடுவோம்
ஒழுங்காய் வாழப் பழகிடுவோம்!

ஊழலை என்றும் எதிர்த்திடுவோம்.
உதட்டில் சிகரெட் மறந்திடுவோம்
பழகோம் பழகோம் மதுவினை
பாலியியல் கொடுமையை கொளுத்திடுவோம்!

வாழ்க்கை என்பது வரமாகும்
வாழ்வோம் பிறர்க்கு பயனாக
விட்டுக் கொடுக்கத் தெரிந்து வட்டால்
வீட்டில் என்றும் சண்டையில்லை
பணத்தால் நிம்மதி வருவதிலலை
பாசம் தருமே பெரும் சுகமே

பாட்டில் மனதை  லயித்திடுவோம்
படிக்க கொஞ்சம் பழகிடுவோம்
பாரதி சொன்ன வரிகளைப் போல்
அச்சம் சினத்தை மறந்திடுவோம்
கோபம் கோபம் வேண்டாமே
கோலா கலமாய் வாழ்வோமே



பூத்தது பூத்தது புத்தாண்டு
புலர்ந்தது புது யுகம் பூமியிலே

Owned and Published by K. Viji on behalf of Raaj Sri Publications
7/4, V.N. Dass Road, Border Thottam, Annasalai, Chennai-2. and printed at
Premium Prints, Chennai-2. Editor : G.S. Manian.